Registered as a News paper பக்கங்கள் - 08 விலை - ரூபா 07

# ஈழநாதம்

மட்டக்களப்பு பதிப்பு மக்கள் நாளிதழ்

Eezhanatham

நாதம் 01 திருவள்ளுவர் ஆண்டு 2035 ஐப்பசி 25 10.11.2004 புதன்கிழமை ஓசை 163

மின்னியல், இலத்திரனியல்
உபகரணங்கள் பெறுவதற்கு OR
பழுதுபார்க்க, பாடல்கள், படங்கள், ஒலி, ஒளி
நாடா, இசை தட்டுக்கள் பெறுவதற்கு நாட
வேண்டிய இடம்
T.V.R. ELECTRONIC'S
NO 88/1
DOCTOR LANE
KALUWANCHIKUDI.
காட்சியறை
T.V.R SONY SHOW ROOM
பிரதான வீதி,
(மக்கள் வங்கி அருகாமை)
களுவாஞ்சிகுடி

## தாயகம் திரும்பிய அன்ரன் பாலசிங்கத்தை தளபதிகள் கிளிநொச்சியில் வரவேற்பு



(நமது நிருபர்)

தாயகம் திரும்பிய தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகரும் தத்துவாசிரியருமான கலாநிதி அன்ரன் பாலசிங்கத்தை தமிழீழ விடுதலைப் புலிகளின் முக்கியஸ்தர்கள் வரவேற்றுள்ளனர்.

நேற்று காலை தாயக நேரம் 10.15 மணியளவில் சிறிலங்கா விமானப்படையினரின் சிறப்பு உலங்குவானூர்தி மூலம் அன்ரன் பாலசிங்கம் அவர்களும் அவரது பாரியார் அடேல் பாலசிங்கம் அவர்களும் கிளிநொச்சி பொது விளையாட்டு மைதானத்தை வந்தடைந்தனர்.

அவர்களை தமிழீழ அரசியல்த்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், தமிழீழ காவல்த்துறைப்

(தொடர்ச்சி 8ம் பக்கம்)

## இன்று நோர்வே வெளியுறவு அமைச்சர் வருகை நாளை வன்னி செல்கிறார்

(நமது நிருபர்)

இன்று கொழும்பு வரும் நோர்வேயின் வெளியுறவு அமைச்சர் ஜோன் பீற்றர்சன் ஜனாதிபதியை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.

இதனையடுத்து நாளை வியாழக்கிழமை கிளிநொச்சிக்கு சென்று தேசியத் தலைவர் மேதகு. வே. பிரபாகரன் அவர்களை சந்தித்து பேசுவார் என தகவல்கள் தெரிவிக்கின்றன.

இப்பேச்சுவார்த்தையை முடித்துக்கொண்டு கொழும்பு திரும்பும் பீற்றர்சன் மீண்டும் ஜனாதிபதியையும் எதிர்க்கட்சித் தலைவரையும் சந்தித்த பின்பு வெள்ளிக்கிழமை நாடு திரும்புகிறார்.

(தொடர்ச்சி 8ம் பக்கம்)

# சமாதானப் பேச்சு தாமதமாவதால் ஆபத்துக்கள் தோன்றும் நிலை!

## அரசுக்கு அழுத்தம் கொடுக்குமாறு நோர்வேயிடம் கூட்டமைப்பு வலியுறுத்தல்

(ரகுலக்ஷனா)

**விடுதலைப் புலிகளுக்கும் சிறிலங்கா அரசுக்கும்இடையிலான இடை நிறுத்தப்பட்ட சமாதானப் பேச்சுவார்த்தையை மீண்டும் ஆரம்பித்து இடைக்கால தன்னாட்சி அதிகாரசபையை வடக்குக் கிழக்கில் நிறுவ வேண்டும்.**

இதற்கு நோர்வேயும், சர்வ்தேச சமூகமும் சிறிலங்கா அரசுக்கும், ஜனாதிபதிக்கும் அழுத்தத்தை பிரயோகிக்க வேண்டும்.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நோர்வேயின் சிறப்பு தூதுவரான எரிக்சொல்ஹெய்மிடம் வலியுறுத்தியுள்ளது.

(தொடர்ச்சி 8ம் பக்கம்)

## பேச்சுவார்த்தையில் தனித்தரப்பு வேண்டும் சொல்ஹெய்மிடம் ஹக்கீம் தெரிவிப்பு



(நமது நிருபர்)

சமாதானப் பேச்சுக்கள் மீண்டும் ஆரம்பிக்கும் போது முஸ் லிம் காங்கிரஸ் தனித்தரப்பாக கலந் துகொள்ள வேண்டுமென ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் நோர்வேயின் சிறப்புத் தூதுவர் சொல்ஹெய்மிடம் வலியுறுத்தியுள்ளது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங் கிரஸ் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூப்ஹக்கீமை நோர்வே தூதுவர் அவரது வீட்டுக்கு

(தொடர்ச்சி 8ம் பக்கம்)



## அதிபரின் இடமாற்றத்தை கண்டித்து ஏறாவூர் மாணவர்கள் பகிஷ்கரிப்பு

(ஏறாவூர் நிருபர்)

ஏறாவூர் தமிழ் மகா வித்தியாலய மாணவர்கள் நேற்று செவ்வாய்கிழமை முதல் வகுப்புப் பகிஷ்கரிப்புப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர். பாடசாலையைத் திறக்கவிடாது தடுத்து நேற்றுக்காலை வீதிமறியல் போராட்டத்திலும் ஈடுபட்டனர்.

இப்பாடசாலையில் கடந்த ஆறு மாதகாலமாக தற்காலிகமாகக்

(தொடர்ச்சி 8ம் பக்கம்)

## கறுவாக்கேணியில் இளைஞர் மீது நேற்று துப்பாக்கி சூடு!

(நமது நிருபர்)

மட்டக்களப்பு - வாழைச்சேனை வீதி கறுவாக்கேணியில் நேற்று காலை இளைஞரொருவர் இனந்தெரியாத நபர்களினால் சுடப்பட்டு மட்டக்களப்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று காலை 8.30 மணியளவில் இடம்பெற்ற இச்சம்பவத்தில்

(தொடர்ச்சி 8ம் பக்கம்)

## காத்தான்குடியில் கைதான இருவரில் ஒருவர் விடுதலை

(நமது நிருபர்)

மட்டக்களப்பு காத்தான்குடியில் அண்மையில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்கள் தொடர்பாக விளக்கமறியலில் வைக்கப்படடிருந்த இருவரில் ஒருவர் விடுதலை செய்யப்பட்டுள்ளார். மற்றவர் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளார்.

குறிப்பிட்ட வன்முறைச் சம்பவம் தொடர்பாக கைதாகி விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த மஸ்ஜிதுல் குபா பள்ளிவாசல் பிரதம நம்பிக்கையாளரான எம்.அஸ்ரப் என்பவரே பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இவரது பிணை மனுவை ஏற்றுக் கொண்ட மட்டக்களப்பு மாவ

(தொடர்ச்சி 8ம் பக்கம்)

### இன்றைய நாளில்

### தகவற்துளி

முதன் முதலாக யுத்த டாங்கிகளையும், ஆறு நீருந்த விசைப்படகுகளையும், பெருமளவு ஆயுதங்களையும் கைப்பற்றிய பூநகரி- நாகதேவன்துறை இராணுவ, கடற்படை கூட்டுத்தளம் மீதான தாக்குதலின் ஆரம்ப நாள் இன்று

# பேசாலை மீனவர் போராட்டம் தற்காலிகமாக இடை நிறுத்தம்

(நமது நிருபர்)

**இந்திய மீனவர்களின் அத்துமீறல்களுக்கு எதிராக மன்னார் பேசாலை மீனவர்கள் ஆரம்பித்த போராட்டம் நேற்று மாலையுடன் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது.**

மன்னார் ஆயர் இல்லத்தில் நேற்று ஆயர் அதி வண. இராயப்பு ஜோசப் ஏற்பாடு செய்த சந்திப்பில் வன்னி பிராந்திய இராணுவ தளபதி மேஜர் ஜெனரல் பரமி குலதுங்க அளித்த உறுதி மொழியையடுத்து இந்தப் போராட்டம் இடைநிறுத்தப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட சந்திப்பில் மீனவர் சங்க பிரதிநிதிகள், பாராளுமன்ற உறுப்பினர்கள், பொலிஸ், இராணுவம், கடற்படை அதிகாரிகளும் கலந்து கொண்டார்கள்.

இந்திய மீனவர்களின் அத்துமீறல்களைத் தடுப்பதற்கு இரண்டு வார காலத்திற்குள் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என அளிக்கப்பட்ட உறுதி மொழியை மீனவர்கள் ஏற்றுக் கொண்டனர்.

இந்த இரண்டு வார காலத்தின் பின்பும் இந்திய மீனவர்களின் அத்துமீறல்கள் தொடருமானால் தமது போராட்டம் மீண்டும் ஆரம்பிக்கப்படும் என மீனவர் சங்கப் பிரதிநிதிகள் இந்தச் சந்திப்பில் உறுதிபடத் தெரிவித்துள்ளனர்.

## இலங்கை கடற்பரப்பில் 12 இந்திய மீனவர்கள் கைது

(நமது நிருபர்)

இலங்கை கடற்பரப்பில் சட்டவிரோதமாக மீன்பிடித்துக் கொண்டிருந்த 12 இந்திய மீனவர்களை கடற்படையினர் நேற்று அதிகாலை கைது செய்துள்ளனர்.

அவர்கள் வந்த மூன்று இழுவைப் படகுகளும் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளன. கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்கள் தலைமன்னார் பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டதாக கடற்படையின் அதிகாரியொருவர் தெரிவித்தார்.

இவர்கள் நேற்று நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டதுடன், அவர்களின் இழுவைப் படகுகள் காரைநகருக்கு கொண்டு செல்லப்படுமென்று தலைமன்னார் பொலிசார் தெரிவித்தனர்.

இதேவேளை, மன்னார் பேசாலை மீனவர்களின் போராட்டம் தற்காலிகமாக கைவிடப்பட்டதைத் தொடர்ந்து மீனவர்களின் பணிகள் வழமைக்கு திரும்பியுள்ளன.

## பயிற்சியிலீடுபடும் பட்டதாரிகளுக்கான நியமனங்கள் அடுத்த வருடம் பெப்ரவரி மாதத்திற்கு முன் பூர்த்தியாகும்

(வி.ரி.சகாதேவராஜா)

அரசின் தேர்தல் வாக்குறுதியின் படி பயிற்சி பெற்றுவரும் 41 ஆயிரம் வேலையற்றப் பட்டதாரிகளுக்கு பூரணமாக வேலை வாய்ப்பு வழங்கும் கருமம் அடுத்தவருடம் பெப்பரவரியில் பூர்த்தியாகுமென கூறப்படுகின்றது.

இந்த 41 ஆயிரம் பட்டதாரிகளில் 10 ஆயிரம் பேருக்கு ஆசிரியர் தொழில் வழங்க கல்வி அமைச்சு உறுதியளித்திருந்தது. கிராம மற்றும் தோட்டப்புறப் பகுதியில் நிலவும் கூடுதலான ஆசிரியர் தட்டுப்பாட்டை நீக்கும் வகையில் இத்தொகை 15 ஆயிரமாக அதிகரிக்கப்படலாமென அதிகாரியொருவர் கூறினார்.

இலங்கை வரலாற்றில் கூடுதல் தொகை பட்டதாரிகள் ஒரே தடவையில் தொழில் வாய்ப்பைப் பெறுவது இதுவே முதற்தடவையென கூறப்படுகின்றது.

ஏனைய பட்டதாரிகள் விவசாயம், சுகாதாரம், போக்குவரத்து மின்சாரம், நிர்ப்பாசனம் போன்ற துறைகளில் நியமிக்கப்படுவார்கள்.

## வவுனியாவில் இளைஞர் கைது!

(நமது நிருபர்)

வவுனியா நகரில் 26 வயது இளைஞரொருவர் நேற்று முன்தினம் கைத்துப்பாக்கியுடன் பொலிசாரால் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

கிளிநொச்சியைச் சேர்ந்த சுப்பிரமணியம் திருமுருகன் என்ற இந்த இளைஞன் ஓட்டோவில் பயணம் செய்து கொண்டிருந்த சமயம் கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸ் தரப்பு தகவலின்படி இவரிடம் சீனத் தயாரிப்பான கைத்துப்பாக்கி கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. நீதிமன்ற உத்தரவின் பேரில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள இவர், வேறு ஒருவரிடம் கையளிப்பதற்காக அந்த துப்பாக்கியை வைத்திருந்ததாகப் பொலிசாரிடம் தெரிவித்துள்ளார்.

## புலமை பரிசில் பெற்று ஜேர்மன் சென்ற அதிகாரிகள் நாடு திரும்பினர்

(அட்டாளைச்சேனை நிருபர்)

இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவனத்தின் (சிலீடா) அனுசரணையில் இலங்கையின் வடக்கு கிழக்கு மாகாணத்தை போதியளவு பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் இலங்கை நிருவாக சேவையில் கடமை புரியும் 20 அதிகாரிகள் புலமைப் பரிசில் பெற்று ஜேர்மன் சென்று திரும்பியுள்ளனர்.


இருவார காலம் ஜேர்மனியில் தங்கியிருந்து பயிற்சிக்காவும், ஒருவார காலத்தினை போக்குவரத்திற்காகவும் என மூன்று வார காலப்பகுதியினைக் கொண்டதாக அமைந்த இப்புலமைப் பரிசின் நோக்கமானது இலங்கையின் தரமான நிருவாக முறையை ஜேர்மனியர்களுக்கு வெளிப்படுத்துவதோடு அந்நாட்டிலுள்ள நிருவாக முறைமையை எம் நாட்டுக்கு தெளிவுபடுத்தும் பொருட்டு பயிற்சி வழங்கப்பட்டது.

ஜேர்மனிய அரசு மற்றும் அமைச்சு அலுவலகங்களில் நடை பெறும் நிருவாகம் தொடர்பான செயற்பாடுகளையும், சமஷ்டி ஆட்சியில் அரச நிருவாகம் மேற்கொள்ளப்படும் முறை பற்றியும் இந்த அதிகாரிகளுக்கு பயிற்றப்பட்டன.

கடந்த ஒக்டோபர் 18 ஆம் திகதி நிருவாக பரிமாற்றுத்திட்ட அடிப்படையில் சென்று தற்போது திரும்பியுள்ள அதிகாரிகளில் 13 தமிழ் பேசும் அதிகாரிகளும், 07 சிங்கள அதிகாரிகளும் இடம் பெற்றனர்.

அம்பாறை மாவட்டத்திலிருந்து புலமைப் பரிசில் பெற்றுச் சென்ற குழுவில் அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர் யூ.எல். ஏ. அஸீஸ் மற்றும் நிந்தவூர் பிரதேச செயலாளர் எஸ்.எல்.எம்.ஹஸீம் ஆகியோர் உள்ளடங்கினர்.

இவர்கள் இருவரும் அம்பாறை மாவட்டத்திலிருந்து தெரிவு செய்யப்பட அவர்களது திறமை மற்றும் சேவை நோக்கு அடிப்படை அனுபவம் என் பன காரணமாக அமைந்தன.



*சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு சமீபத்தில் மருதமுனை அல்மனார் மத்திய கல்லூரி ஆரம்பப்பிரிவில் நடைபெற்ற வைபவமொன்றில் கவிஞர்.றகுமான், ஏ.ஜப்பார், 05 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் கூடிய புள்ளியைப் பெற்ற மாணவன் மு.அ.அம்சாருக்கு வண்ண வண்ண பூக்கள் சிறுவர் பாடல் நூலை வழங்குவதையும், அதிபர் எஸ்.எல்.ஏ.றஹீம், உதவி அதிபர் ஏ.ஆர்.ஏ.றசூல், மற்றும் ஆசிரியைகளையும், மாணவர்களையும் படங்களில் காணலாம். (படமும், தகவலும்:- மருதமுனை பி.எம்.எம்.ஏ.காதர்)*

## செய்தித் துளிகள்

### முதலுதவிப் பயிற்சி

(நமது நிருபர்)

சென்- ஜோன் அம்பியுலன்ஸ் முதலுதவிப் படைப்பிரிவினால் அண்மையில் மட்/ களுவன்கேணி விவேகானந்தா வித்தியாலயத்தில் மாணவ, மாணவிகளுக்கான முதலுதவிப் பயிற்சிப்பட்டறை நடைபெற்றது.

இந்நிகழ்வில் மாணவர்களுக்கான விரிவுரைகளை மாவட்ட தாதிப்பிரிவு அதிகாரி எஸ்.றொபேக்கா வழங்கினார். செய்முறைப் பயிற்சியினை மாவட்ட அதிகாரி எம்.பீ.எம். றிபாஸ் வழங்கினார்.

### மலர் வெளியீடும் சிறுவர் தினக் கொண்டாட்டமும்

(கணன்)

அம்பாறை மாவட்ட திருநாவுக்கரசு நாயனார் குருகுலத்தின் சிறுவர் தின மலர் வெளியீடும், சிறுவர் தினக் கொண்டாட்டமும் இம்மாத இறுதியில் நடைபெறவுள்ளதாக குருகுலத்தின் பணிப்பாளர் கண.இராஜரெத்தினம் தெரிவித்தார். குருகுலப்பணிப்பாளர் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் குருகுல சிறார்களின பல்வேறுபட்ட கலை நிகழ்வுகள் என்பன இடம் பெறவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

### மக்கள் ஆர்வம்

(பாண்டிருப்பு நிருபர்)

வடகிழக்கில் ஏற்பட்டுள்ள காலநிலை மாற்றத்தினால் மக்கள் மத்தியில் சூறாவளி பற்றிய அச்சம் ஏற்பட்டுள்ளதனால் பொது மக்கள் தமக்கு தேவையான பொருட்களை அதிகளவில் வாங்கி கொள்வனவு செய்வதில் ஆர்வம் காட்டிவருகின்றனர்.

வங்களா விரிகுடாவில் தாழமுக்கம் ஏற்படும் அபாயமுள்ளதாகத் தெரிவிக்கப்பட்ட தகவல்களையடுத்தே பொதுமக்கள் முன்கூட்டியே அன்றாடப் பொருட்களான அரிசி, சீனி, மா, மண்ணெண்ணை, அரிக்கன் லாம்புகள், குப்பிவிளக்குகள் என்பனவற்றை அதிகளவில் வாங்கி கொள்வனவு செய்வதில் அதிக ஆர்வம் காட்டிவருகின்றனர்.

### தடுப்பூசி மருந்து வழங்கல்

(பாண்டிருப்பு நிருபர்)

கல்முனை ஆதாரவைத்தியசாலையின் சுகாதாரப் பிரிவினரால் 1408 பாடசாலை மாணவிகளுக்கு ஜேர்மன் சின்னமுத்து தடுப்பூசி மருந்து வழங்கப்பட்டுள்ளதாக சுகாதாரப் பிரிவின் நிகழ்ச்சித்திட்டமிடல் உத்தியோகஸ்தர். எஸ். பாஸ்கரன் தெரிவித்தார்.

கல்முனையில் அமைந்துள்ள பாடசாலைகளுக்குச் சென்று இத்தடுப்பூசியினைப் போட்டுக் கொள்ளாத மாணவர்களுக்கு வழங்கி வருகின்றனர்.

பெண்களுக்காக மட்டும் வழங்கப்பட்டு வரும் இத்தடுப்பூசியை இதுவரை பெற்றுக் கொள்ளாதவர்கள் சுகாதாரப் பிரிவினரோடு தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொண்டுள்ளனர்.

### வங்கி திறப்பு

(பாண்டிருப்பு நிருபர்)

எதிர்வரும் தீபாவளி தினத்தன்று அக்கரைப்பற்று ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் பிரிவில் புதிய மக்கள் வங்கிக்கிளை ஒன்று திறக்கப்படவுள்ளதாக அம்பாறை மக்கள் வங்கி உதவி முகாமையாளர் தெரிவித்துள்ளார்.

### கல்வியமைச்சின் சந்திப்பு ஒத்திவைப்பு!

(வேதசகா)

கல்வியமைச்சின் செயலாளர் கலாநிதி தாரா டிமெல்லுடனான இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் சந்திப்பு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

கடந்த வெள்ளியன்று (5.11.2004) இசுருபாயவில் இச்சந்திப்பு நடைபெறவிருந்தமை தெரிந்ததே. கல்வியமைச்சின் செயலாளர் தாரா டிமெல் மற்றுமொரு கல்வி மாநாட்டில் கலந்துகொள்ளச் சென்றதே ஒத்திவைப்புக் காரணமாகும்.

# திருக்கோயில் பிரதேசத்தில் சுயதொழில் முயற்சிக் கடன்

(சர்வேஸ்வரன்)

திருக்கோயில், தம்பிலுவில் பலநோக்குக் கூட்டுறவுச் சங்க சுயதொழில் முயற்சிக் கடன் திட்ட ஆரம்ப வைபவம் அண்மையில் அக்கரைப்பற்று தெற்கு பலநோக்கு கூட்டுறவுச் சங்க கிளையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதிகளாக கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் புவனேந்திரன், சங்கத் தலைவர் சீ. செல்வராஜா, பொதுமுகாமையாளர் ஆ.தட்சணாமூர்த்தி ஆகியோர் கலந்து கொண்டனர்.

இச்சுயதொழில் கடன் திட்டத்தில் ஆடுவளர்ப்பு, கோழி வளர்ப்பு, மாடுவளர்ப்பு, வீட்டுத்தோட்டம் போன்றவற்றிற்கு 15 ஆயிரம் ரூபா கடன் வழங்கப்பட்டது.

இக்கடன்களைப் பெற்றவர்கள் முதல் மாதம் 1000 ரூபாவிற்கு 225 ரூபா வட்டியாகவும் அடுத்த மாதங்களில் 1000 ரூபா வட்டிப் பணத்திற்கு 150 ரூபா செலுத்த வேண்டுமென சங்கத் தலைவர் சீ.செல்வராஜா தெரிவித்தார். கூட்டுறவுச் சங்கத்தில் அங்கம் வகிப்பவர்களுக்கு மாத்திரமே இக்கடன் வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

# காலாவதியான பொருட்கள் விற்பனை செய்வோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும்

## கல்முனை அரசியல்துறை செயலகம் எச்சரிக்கை

(பாண்டிருப்பு நிருபர்)

கல்முனைப் பிரதேசத்தில் அமைந்துள்ள வர்த்தக நிலையங்களில் காலாவதியான பொருட்களை விற்கும் கடை உரிமையாளர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என தமிழீழ விடுதலைப்புலிகளின் கல்முனை அரசியல் துறைச் செயலகம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

கல்முனைப் பிரதேசத்தில் அமைந்துள்ள சில, பல சரக்குக் கடைகள், மருந்துக் கடைகள் போன்றவற்றில் பொதுமக்களின் பாவனைக்கு உதவாத காலாவதியான பொருட்கள் விற்பனை செய்யப்பட்டு வருவதாக அரசியல் துறையினரிடம் புகார் தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும் குறித்த கடைகளில் காலாவதியான பொருட்கள் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டால் கடை உரிமையாளர்கள் தண்டனைக்குட்படுத்தப்படுவார்கள்.உரிமையாளர்கள் தங்களிடம் பாவனைக்குதவாத பொருட்கள் இருந்தால் அழித்து விடுமாறும் அரசியல் துறையினர் விடுத்துள்ள எச்சரிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பெண்களிடம் சேஷ்டை விட்ட நபர் பொலிசாரால் கைது!

(பாண்டிருப்பு நிருபர்)

கல்முனையில் பெண்களிடம் சேஷ்டை விட்ட நபர் ஒருவர் கல்முனைப் பொலிசாரினால் கைது செய்யப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளதாக தெரியவருகின்றது.

துறைநீலாவணைக் கிராமத்தைச் சேர்ந்த குறித்த நபர் வீதியால் செல்லும் சில பெண்களிடம் தகாத வார்த்தைகளை பிரயோகித்து வம்புக்கு இழுக்கும் செயலிலும், சேஷ்டை புரிவதிலும் ஈடுபட்டு வந்துள்ளார். இவரின் இந்நடவடிக்கையால் பாதிக்கப்பட்ட பெண் ஒருவர் குறித்த நபருக்கு எதிராக கல்முனைப் பொலிசில் முறைப்பாடு செய்துள்ளார். இவரின் முறைப்பாட்டை அடுத்தே அந்நபரை பொலிசார் கைது செய்து விளக்கமறியலில் வைத்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

# கல்வியில் கொடிகட்டிப் பறந்த தமிழ் சமூகம் இன்று பல்வேறு காரணங்களால் பின்தங்கியுள்ளது

(விரி.சகா)

''முன்பு கல்வியில் கொடிகட்டிப் பறந்த தமிழ்ச் சமூகம் இன்று பல்வேறு காரணங்களால் பின்தங்கி வருகிறது. இது கசப்பான உண்மையாகும். அன்று யாழ்ப்பாணம் தொடக்கம் கல்முனை வரை தமிழரே அரச உத்தியோகஸத்தர்களாக இருந்தனர். இன்று அந்த நிலை இல்லை!.

இவ்வாறு கல்முனை உவெஸ்லி கல்லூரியில் நடைபெற்ற நூலகதின விழாவில் சிறப்பதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றிய கல்முனை ஆதார வைத்திய சாலை வைத்திய அத்தியட்சகர் டாக்டர். கே.முருகானந்தம் தெரிவித்தார்.

மாணவர்களை, எழுத்தாளர்களை, புத்திஜீவிகளை கௌரவிக்க வேண்டும். மனிதன் வாழும் போதே வாழ்த்த வேண்டும். எந்தஒரு விளக்கும் எரிவதற்கு மற்றுமொரு விளக்கு (ஒளி)தேவை. கல்வி என்பது ஒரு போராட்டம். அதில் பல தடைகள் வரலாம். அவற்றைப் படிக்கற்களாக மாற்றி முன்னேற வேண்டும்.

ஒருவகையில் தொலைக்காட்சி பாரிய தாக்கத்தை எமது சமுதாயத்தில் ஏற்படுத்தியுள்ளது. இவ்விழிப்புணர்ச்சி தேவை. தேவையற்ற நிகழ்ச்சிகளில் காலநேரத்தை விரயம் செய்வது தவிர்க்கப்பட வேண்டும்.

# மத்திய மாகாண கல்வியமைச்சு வெற்றிடங்களை நிரப்பும்!

(விரி.சகாதேவராஜா)

மத்திய மாகாண கல்வியமைச்சு தமது மாகாணத்திலுள்ள கல்வித் துறைசார் வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுத்துள்ளது.

பிரதி மாகாண கல்விப் பணிப்பாளர், அதிபர்கள், ஆசிரிய ஆலோசகர்கள் போன்ற பதவிகளுக்கு விண்ணப்பம் கோரியுள்ளது. நவம்பர் 10 ஆம் திகதிக்கு முன் விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென்று மாகாண கல்வியமைச்சின் செயலாளர் விஜித ஏக்கநாயக்க அறிவித்துள்ளார்.இலங்கை கல்வி நிருவாக சேவை தரம் I, தரம் II அதிகாரிகளிடமிருந்து பி.மா.க.பணிப்பாளர் பதவிக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது. 50 வயதுக்குட்பட்ட இலங்கை ஆசிரியர் சேவை சிரேஸ்ட ஆசிரியர்கள் முதன்மை ஆசிரியர் பதவிக்கு விண்ணப்பிக்க முடியுமென கூறப்பட்டுள்ளது.

# பிள்ளைகளை நற்பிரஜைகளாக்கும் கடமை ஆசிரியர்களுக்கும், பெற்றோர்களுக்கும் உண்டு

## மட்டு அம்பாறை கல்விக் கழக பொறுப்பாளர் விமல்ராஜ்

(கிரிஜா)

பிள்ளைகளை நற்பிரஜைகளாக்கும் கடமை ஆசிரியர்களுக்கும், பெற்றோர்களுக்கும் உண்டு. இன்றைய சிறார்களே நாளையத் தலைவர்கள்.இவ்வாறு நேற்று பட்டிப்பளை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் நடைபெற்ற பரிசளிப்பு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றிய விடுதலைப் புலிகளின் மட்டு அம்பாறை கல்விக் கழகப் பொறுப்பாளர் விமல்ராஜ் தெரிவித்தார்.

பாடசாலை அதிபர் ஆ.சிவசம்பு தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் தொடர்ந்து உரையாற்றிய கல்விக் கழகப் பொறுப்பாளர் எமது பிரதேச கல்வி நிலையை மேம்படுத்தக்கூடிய கடப்பாடு விடுதலைப் புலிகளாகிய எமக்கு உண்டு. விடுதலைப் போராட்டத்தில் கூட எமது தேசியத் தலைவர் கல்விக்கு முக்கியத்துவம் கொடுத்துள்ளார்.

போரும் கல்வியும் இணைந்ததாகவே எமது வாழ்வு இருக்கின்றது எனவும், மாணவ சமுதாயத்தினை உயர் ஒழுக்கமுடையவர்களாக ஒரு தேசபக்தியுடையவர்களாக ஆசிரியர்களும், பெற்றோர்களும் மாற்ற வேண்டும், எனவும் தமதுரையில் குறிப்பிட்டார்.



பட்டிப்பளை அ.த.க.பாடசாலையில் நேற்று நடைபெற்ற பரிசளிப்பு விழாவில் விடுதலைப்புலிகளின் மட்டு அம்பாறை கல்விக் கழகப் பொறுப்பாளர் விமல்ராஜ், மாவடி முன்மாரிக் கோட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் உதயராஜ் உரையாற்றுவதையும் பாராளுமன்ற உறுப்பினர் அரியநேத்திரன் மாணவன் ஒருவனுக்கு பரிசில் வழங்குவதையும் கலை நிகழ்வில் கலந்து கொண்ட மாணவர்களையும் படத்தில் காணலாம். (படம்:- கிரிஜா,பிரிந்தினி)

# நூலகங்களில் நூல்கள் இருந்தால் மாத்திரம் போதாது அவை பயன்படுத்தப்பட வேண்டும்

## நூலகவிழாவில் பிரதிக்கல்வி பணிப்பாளர் பீர்மொகமட்

(விரி.சகாதேவராஜா)

''பாடசாலை நூலகங்கள் வெறுமனே நூல்களைச் சேகரித்து வைக்கும் இடமாக இல்லாமல் அனைத்து நூல்களும் பயன்படுத்தும் இடமாக விளங்க வேண்டும். இல்லாவிடின் அறிவு விருத்தி ஏற்படாது" இவ்வாறு கல்முனை உவெஸ்லி கல்லூரியில் நடைபெற்ற நூலக தின விழாவில் உரையாற்றிய கல்முனை வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.ஏ.பீர்மொகமட் தெரிவித்தார்.கல்லூரி அதிபர் பொன். முருகையா தலைமையில் நடைபெற்ற விழாவில் பீர்மொகமட் மேலும் பேசுகையில்:-

''கட்டடங்களால் மாத்திரம் கல்வி அபிவிருத்தி காணமுடியாது. நூலகங்கள் அபிவிருத்தி அடைந்தால் மாத்திரமே அபிவிருத்தி அர்த்தமுள்ளதாக அமையும். நூலகங்களைப் பயனுள்ள விதத்தில் அணுகினால் உலகத்தையே கைப்பற்றிவிடலாம். தகவல் பரிமாற்றம் கல்வியில் முக்கிய தேர்ச்சியாக விளங்குகின்றது. அனைத்திற்கும் தகவல் தொடர்பாடல் அடிப்படையாக விளங்குகின்றது" என்றார்.

# புனித ரமழான் நிகழ்வுகள் வியாழனன்று சம்மாந்துறையில்

(விரி.சகாதேவராஜா)

புனித ரமழான் மாதத்தையொட்டி சம்மாந்துறை-30ம் பிரிவு கிராம அபிவிருத்திச் சங்கம் எதிர்வரும் வியாழனன்று (11-11-2004) பல நிகழ்வுகளை ஒரே மேடையில் நடாத்தவுள்ளது.

கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் எம்.வை.ம.ஃறூப் தலைமையில் சம்மாந்துறை அல்-மர்ஜான் மகளிர் கல்லூரியில் இவ் ரமழான் நிகழ்வுகள் நடைபெறவுள்ளன. இந்நிகழ்விற்குப் பிரதம அதிதியாக கிழக்கு உட்கட்டமைப்பு பிரதியமைச்சர் எம்.ஐ.அன்வர் இஸ்மாயில் கலந்து கொள்வார்.

அந்த மேடையில் ''இப்தார்" நோன்பு திறக்கும் நிகழ்வுடன் ஏனைய நிகழ்ச்சிகள் ஆரம்பமாகும். விதவைகள் 40 பேருக்கு புடவைகள் அன்பளிப்புச் செய்யப்படவிருக்கின்றன. நோன்புப் பெருநாளையொட்டி இப்புத்தாடை வழங்கப்படுகின்றன.

# கொழும்பு பல்கலைக்கழக கலைப் பீடம் ஆங்கிலத்தில்

(விரி.சகாதேவராஜா)

கொழும்பு பல்கலைக் கழக கலைப்பீடம் தமது பாடங்களை ஆங்கில மொழியில் போதிக்க தீர்மானித்துள்ளது. பொருளியல், அரசியல் விஞ்ஞானம், புவியியல், சமூகவிஞ்ஞானம் போன்ற பாடங்கள் இனிமேல் பூரணமாக ஆங்கிலத்தில் போதிக்கப்படவுள்ளது.

கலைப்பீடம் புதிதாக ஒரு ஆங்கிலப்பாட வேலைத் திட்டத்தையும் முன்னெடுத்துச் செல்லவிருப்பதாக கலைப்பீட பீடாதிபதி கலாநிதி.எஸ்.எம்.பி.சேனநாயக்க தெரிவித்தார். பல்கலைக் கழகத்திற்குத் தெரிவாகியிருக்கும் மாணவர்களுக்கு ஆறுமாத ஆரம்பப் பயிற்சிகள் நிறைவுற்ற பின்னர் மேற்படி ஆங்கிலத் திட்டம் அறிமுகப்படுத்தப்படும். இருமாணவர் அணிகளை ஒரே தடவையில் வைத்து பயிற்சியளிக்கத் திட்டமிட்டுள்ளது.

# பின்தங்கிய பிரதேச மக்களின் சுகாதார வசதியை மேம்படுத்தல்

(நமது நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மக்களின் சுகாதார வசதியினை மேம்படுத்தும் திட்டமொன்றினை உலக தரிசன நிறுவனம் மேற்கொண்டுள்ளனர்.

இதன் முதற் கட்டமாக செங்கலடி பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள புல்லுமலை, கோப்பாவெளி போன்ற பிரதேசங்களில் அண்மையில் இலவச வைத்திய முகாமொன்று நடைபெற்றது.

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையைச் சேர்ந்த பல வைத்தியர்கள் இம்முகாமில் கலந்து கொண்டு பல்வேறுபட்ட நோய்களுக்கு சிகிச்சையளித்தனர்.



# கொடிய வாந்திபேதி நோயிலிருந்து எம்மை பாதுகாத்துக் கொள்வோம்

இது ஓர் பற்றீரியா தொற்றாகும் இன்நோயை ஏற்படுத்தும் கிருமி ''விப்ரியே கொலரே"(vibro choleroe) என்ற பற்றீயா ஆகும்.

இது உலகம் பூராகவும் பரவிக் கொண்டு இருக்கின்ற ஓர் தொற்று நோயாகும். மேலும் மேற்கு வங்கம், பங்களாதேஷ் போன்ற நாடுகளில் கடந்த 174 வருடங்களாக இந்நோயின் தாக்கம் மாறி மாறி ஏதொ ஒரு கிராமத்தில் இருந்து கொண்டே உள்ளது.

## நோய் பரவும் முறை

(Rowte of Trans rission)

கிருமியினால் மாசுபடுத்தப்பட்ட நீர், உணவு போன்றவற்றின் மூலம் அடிப்படைச் சுகாதாரத்தினை (தனிநபர் சுகாதாரத்தினை) கடைப்பிடிக்க தவறுவதன் மூலம் பரவுகின்றது.

உதாரணமாக இந்நோய் தொற்றுக்குள்ளாக்கப்பட்ட ஒருவர் திறந்த வெளியில் மலம் கழிக்கும் போது அம் மலம் ஆனது காகம், ஓடுநீர் போன்றவற்றில் பரவுவதன் மூலமும் தொற்றுக்குள்ளாக்கப் பட்ட நோயாளர் குடும்பத்தில் உள்ள வேறவர்களிடமும் பரவுவதற்கு வாய்ப்புண்டு.

இக்கிருமியானது அமில ஊடகத்தினால் இலகுவில் அழியக் கூடியது எனவே பட்டினி, விரதம் இருப்பவர்களின் இரப்பையில் கூடியளவு அமிலச் செறிவு இருப்பதனால் 1000 மில்லியன் கிருமிகள் தொற்றுதலினாலும் நோய் சிலசமயம் ஏற்படுவதில்லை ஆனால் இதற்கு மாறாக புரத உணவினை சாப்பிட்ட பின்பு இரப்பையில் உள்ள அமிலம் சமிபாட்டிற்காக பயன்படுத்துவதனாலும் அதற்குப் பிறகு ஒரு மில்லியன் கிருமி உட் சென்றாலும் தொற்றுவர வாய்ப்புண்டு.

அதிலும் குறிப்பாக ஓடு உள்ள கடல் உணவுகளான இறால், நண்டு, கணவாய் போன்றவற்றின் ஓட்டினுள் நிறைய கொலறா கிருமிகள் காணப்படுகின்றன.

## நோயின் குணங்குறிகள

(symptoms and signs)

சடுதியான, கடுமையான வயிற்றோட்டம் ஆரம்பத்தில் நீராக வயிற்றோட்டம் இருந்தாலும் மலம் காணப்படும். ஆனால் பின்பு அரிசி கழுவிய தண்ணீர் போல் வெறும் கலங்கல் நீராகவே வயிற்றோட்டம் போகும் இங்கு வயிற்றோட்டத்துடன் வயிற்று நோவோ அன்றி வயிற்றுக்குத்தோ பொதுவாகக் காணப்படுவதில்லை.

ஃ. சத்தியும் கடுமையாக இருக்கும்
ஃ. நீரிழப்பின் அறிகுறிகள் தோன்றும் அவையாவன
ஃ. தண்ணீர் தாகம்
ஃ. விரைவான பலவீனமான நாடித் துடிப்பு
ஃ. பிசு பிசுப்பான குளிரான தோல்
ஃ. உட்குழிந்த கண்கள்.
ஃ. உலர்ந்த நாக்கு
ஃ. சலம் குறைவாக வெளியேறுதல்.
ஃ. சிறுவர்களில் விரைவில் மயக்கம், களைப்பு என்பனவும் ஏற்படும். இவ்வாறான அறிகுறிகள் தென்பட்டால் ஆரம்பக் கட்டத்திலே அருகில் உள்ள மருத்துவ மனைக்கு சென்று சிகிச்சை பெறலாம். அதற்கு முன் நீர் இழப்பு அறிகுறிகள் தென்பட்டால் ஜீவனி, குளுக்கோஷ் கொடுக்கவும்.

## நோய் வராமல் தடுத்தல்

(prevention)

**1) பாதுகாப்பான நீர்($H_2O$) அருந்த வேண்டும்.**

☞ கிணற்றுக்கு வாரம் ஒரு முறை குளோரின் இடுதல் (நோய் தாக்கம் ஏற்பட்டால் இரண்டு நாட்களிற்கு ஒரு தடவை குளோரின் இடுதல் வேண்டும்.
☞ நன்கு கொதித்தாறிய நீர் பருகுதல்
☞ குடிநீரை மூடி வைத்து அருந்துதல்.

**2) பாதுகாப்பான உணவு உட்கொள்ள வேண்டும்.**

☞ சமைத்த உணவினை உடனே உண்ணுதல்.
☞ உணவை ஈ, இலையான் படாதவாறு மூடிவைத்தல்

**3) பச்சையாக உண்ணும் பழங்கள், இலைவகைகள், காய்கறிகள் போன்ற வற்றை நன்கு அதிகமான நீரில் கழுவி உண்ணுங்கள்**

**4) உணவு உண்ண முன்பும் மலம் கழித்த பின்பும் கைகளுக்கு சவர்க்காரம் போட்டுக் கழுவுங்கள்**

**5) கைகளில் நகங்களை வெட்டி துப்பரவாக இருத்தல்**

**6) நோய் தாக்கம் காணப்படின் கடல் உணவுகளான இறால், கணவாய், நண்டு, மட்டி போன்றவற்றை தவிருங்கள்.**

**7) கடைகளில், பொது இடங்களில் உணவு, சிற்றூணடி, குளிர்பானங்கள், ஐஸ்கிறீம் அருந்துவதை தவிர்க்க வேண்டும்.**


### பாதுகாப்பாக கழிவுகளை அகற்றுவது எப்படி?

☞ நீரைடைப்பு மலசல கூடத்தினை மலம் கழிக்கப் பயன் படுத்துங்கள் அல்லது மலத்தை மண்ணில் புதையுங்கள்.
☞ திறந்த வெளியில் மலம் கழிப்பதனை முற்றாகத் தவித்தல் வேண்டும்.
☞ கழிவிடங்களை மூடிவிடுங்கள் இதனால் இலையான் பெருக்கத்தினை கட்டுப்படுத்துங்கள்.
☞ சமையலில் கூட தாவர, விலங்கு கழிவுகளை உடனுக்குடன் ஆழமாக வெட்டிப் புதையுங்கள்.

* உமது கிராமத்தில் யாருக்காவது வாந்திபேதி நோய் என இனங்கண்டால் நோயாளரை தனிமைப் படுத்தி மருத்துவ உதவியை நாடி சிகிச்சை பெற்றால் உமது உயிரை காப்பாற்றிக் கொள்ளலாம்


எஸ்.உதயராஜ், மருத்துவப் பிரிவு






# டெங்குக்காய்ச்சல்

**டெங்குக் காய்ச்சல் நோயானது அண்மைக் காலங்களில் நாடெங்கும் மிகத் தீவிரமாக பரவி வருகிறது. இதனால் ஏற்படும் உயிர் இழப்புக்களும் அதிகரித்து வரும் அதேவேளையில் தினமும் கணிசமான அளவு நோயாளர்கள் இந்நோயினால் தாக்கப்பட்ட நிலையில் மருத்துவ மனையில் சேக்கப் பட்ட வண்ணம் உள்ளனர். எனவே உயிர்கொல்லி நோயான டெங்கு எமது கிராமங்களையும் தாக்காமல் எச்சரிக்கையுடன் செயற்படுவோம்.**







### டெங்குக் காய்ச்சல்:-

வைரசினால் ஏற்படும் ஒரு நோயாகும்.

### உண்டாவது எப்படி?

- ஏடிஸ் இஜிப்டைஸ்.
- ஏடிஸ் அல்போபிக்ரஸ் எனும் இருவகை டெங்குக்காய்ச்சல் நுளம்புகள் மனிதனைக் கடிப்பதால் இந்நோய் உண்டாகிறது.

### அடையாளங்கள்

- கடும் காய்ச்சல்
- தலைவலி
- வாந்தி
- உடல் வலி வயிற்றுளைச்சல்

மூன்று நான்கு தினங்களில் இந் நோயின் அடையாளங்கள் குறைந்து, நோய் குணமாகும்.

எனினும் சிலருக்கு டெங்கு நோயின் நிலை தோன்றும்.

### அடையாளங்கள.

- தோலின் அடியில் சிறிய இரத்த (சிவப்பு) அடையாளம்.
- கண்கள் சிவப்பு நிறமாதல்.
- மூக்கினால் இரத்தம் கொட்டுதல்.
- மல, சலத்தினூடாக இரத்தம் வெளியாதல்
- வாந்தி அல்லது மலம் கறுப்பு அல்லது செம்பட்டை நிறமாதல்.

இவ் வாறான நோய் அடையாளங்கள் ஏற்பட்டால் உடனே வைத்தியசாலையிலிருந்து அல்லது வைத்திய நிறுவனத்திலிருந்து நிவாரணம் பெற்றுக் கொள்ளவேண்டும்.

டெங்குக் காய்ச்சலினால் பாதிக்கப்பட்டிருக்கும் ஒருவரின் காய்ச்சலில் திடீரென குறைந்து விடக்கூடும். என்றாலும் நோயாளி சுகவீனமாகத் தெரிபட்டால் அது துக்ககரமான ஒரு சம்பவமாகும்.

### அப்படிப்பட்ட ஒரு நோயாளிக்கு

- உடம்பு குளிராதல்
- உடம்பு வெள்ளை நிறமாதல்
- குழப்பமான தூக்கமான நிலை
- மூச்செடுத்தல், நாடி ஓட்டம் வேகமாதல் போன்ற துக்ககரமான அடையாளங்கள் ஏற்படல், நோய் மிகப்பயங்கரமானதாகத் தோன்றும்.

விசேடமாக காய்ச்சலினால் பீடிக்கப்பட்டுள்ள ஒரு பிள்ளையின் காய்ச்சல் திடீரென இறங்குமெனின் அவதானமாக இருங்கள். 'அஸ்பிரின்' அல்லது 'டிஸ்பிரின்' கலக்கப்பட்ட மருந்துகள் கொடுக்க வேண்டாம்.

### டெங்குக் காய்ச்சலைத் தடுத்துக் கொள்வோம்.

டெங்குக் காய்ச்சலைத் தடுத்துக் கொள்ள அதைப்பரப்பும் நுளம்புகள் உண்டாவதைத் தடுத்தல் வேண்டும். தண்ணீர் தேங்கி நிற்கும் பாத்திரங்களில் டெங்கு காய்ச் சலைப் பரப்பும் நுளம்புகள் உற்பத்தியாகும். நோயைத் தடுப்பதற்கு உங்களால் பின்வரும் நடவடிக்கை களை எடுக்கலாம்:



**1. வீட்டின் சுற்றுப் புறத்தைப் துப்பரவாக வைத்துக்கொள்ளுங்கள்.**

**2. குப்பை கூழங்களை பொசுக்கி அல்லது புதைத்து விடுங்கள்.**


**3. குரும்பைக் கோம்பைக்குள் தண்ணீர் தேங்காமல், அதைத் துண்டு துண்டாக வெட்டி விடுங்கள்.**

**4. வெற்றுத்தகர டப்பா, சிரட்டைகள், சட்டிபானைத் துண்டுகள், வெற்றுத் தயிர்ச்சட்டிகள் என்பன வற்றை உடைத்து விடுங்கள்.**

**5. புச்சாடிகள், எறும்புப் பொந்துகள் என்பவற்றில் உப்புக் கட்டிகள் கொஞ்சம் விடுங்கள். அவற்றின் தண்ணீரை எப்போதும் மாற்றி விடுங்கள்.**

**6. வீட்டுக்கூரைகளிலும் சுற்றுப் புறங்களிலும் இருக்கும் பழைய டயர்களில் மண் நிறையுங்கள். இல்லை யென்றால் தண்ணீர் நிற்காமல் ஓட்டைகள் போட்டு விடுங்கள்.**

**7. கூரைகளின் தகரப்பீலிக்குள் தண்ணீர் தேங்கி நிற்காதவாறு அதற்குள்ளிருக்கும் குப்பை கூழங்களை அகற்றிவிடுங்கள்.**



**ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுங்கள்.......**

- காய்ச்சல் ஏற்பட்டதும் முடியுமான அளவு ஓய்வெடுத்துக் கொள்ளுங்கள். விசேடமாகப் பிள்ளைகளைப் பாடசாலைக்கு அனுப்பாது. கட்டிலில் ஓய்வு பெறச் செய்யு ங்கள்.
- அதிகமாக தண்ணீர் வகைகள் குடிக்கச் செய்யுங்கள்.
- அஸ்பிரின், டிஸ்பிரின் கலந்த மருந்து வகைகளை கொடுக்காமல் தடுத்துக் கொள்ளுங்கள்.
- டெங்கு காய்ச்சல் பற்றி சந்தேகம் ஏற்பட்டால் உடனே வைத்திய நிலையத்திலிருந்து நிவாரணம் பெற்றுக் கொள்ளுங்கள்.

*க.துரை, தமிழீழ பொது சுகாதார பரிசோதகர், அம்பாறை மாவட்டம்.*

# இந்தியா பொருளாதாரத்தில் பின்னடையாது;

## நெதர்லாந்தில் மன்மோகன் சிங் தெரிவிப்பு

(சென்னை)

பொருளாதார சீர்திருத்த கொள்கையில் இந்தியா பின்வாங்கும் பேச்சுக்கே இடமில்லை. முதலீட்டாளர்களின் நட்பு நாடாக இந்தியா மாற்றப்படும். முதலீடுகளைப் பெற புதிய நடைமுறைகள் அமுல்படுத்தப்படும்,'' என்று பிரதமர் மன்மோகன் சிங் உறுதி அளித்தார்.

'இந்திய, ஐரோப்பிய கூட்டமைப்பின் 5வது உச்சி மாநாடு,' நெதர்லாந்தில் நடைபெறகின்றது. பிரதமர் மன்மோகன் சிங் இதில் பங்கேற்க சென்றுள்ளார். திஹேக் நகரில் நெதர்லாந்து இந்தியர்களை நேற்று முன்தினம் அவர் சந்தித்தார்.




பதின்மூன்று ஆண்டுகளுக்கு முன் இந்தியாவில் காங்கிரஸ் அரசால் பொருளாதார சீர்திருத்தக் கொள்கை அமுல்படுத்தப்பட்டது. அதன் பின் மூன்று அல்லது நான்கு பொதுத் தேர்தல்கள் நடந்துவிட்டன. கடந்த 13 ஆண்டுகளில் ஆட்சிகள் மாறின. ஆனால், பொருளாதார சீர்திருத்தத்தை தொடர்வதில் எல்லா அரசுகளும் ஒரே மாதிரி இருந்துள்ளன. எதிர்காலத்திலும் அது தொடரும். பொருளாதார சீர்திருத்தக் கொள்கையில் இருந்து இந்தியா பின்வாங்கும் பேச்சுக்கே இடமில்லை.

இந்தியாவில் அரசியல் கட்சிகளுக்கு இடையே போட்டி நிலவுகின்றது. கருத்து வேறுபாடுகள் உள்ளன. இருப்பினும், உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுக் கொள்கைகள் தொடரப்பட்டுள்ளன. இந்தியாவின் பொருளாதார வளர்ச்சியை ஆறு சதவீதத்தில் இருந்து எட்டு சதவீதமாக உயர்த்த இலக்கு நிர்ணயிக்கப்பட்டு இருக்கின்றது. இது, எட்ட முடியாத இலக்கல்ல. ஆனால், இதை சாதிக்க இந்தியாவுக்கு ஏராளமான வெளிநாட்டு முதலீடுகள் தேவை. இந்தியா வளர்ச்சிப் பாதையில் செல்லுமே தவிர, சர்வதேச சுமையாக இருக்காது என பிரதமர் கூறினார்.

உலகளவில் இந்தியாவை பெரிய சக்தியாக உருவாக்குவதற்கான அனைத்து கடின முடிவுகளையும் எடுப்போம். இந்தியாவில் உள்ள ஏராளமான தொழில் வாய்ப்புகளில் வெளிநாட்டு இந்தியர்களும், வெளிநாட்டினரும் பங்கெடுத்துக் கொள்ள வேண்டும். விவசாய பொருள் பதப்படுத்துதல், விவசாய உற்பத்தி, சேவைத் துறைகள், மருந்து தயாரிப்புத் துறைகளில் ஏராளமான வாய்ப்புகள் உள்ளன.

## அத்வானியின் பிறந்த நாளுக்கு

## ஜனாதிபதி, பிரதமர் வாழ்த்து





(புதுடெல்லி)

லோக்சபா எதிர்க்கட்சித் தலைவரும், பா. ஜ., தலைவருமான அத்வானி நேற்று முன்தினம் தனது 78வது பிறந்த நாளைக் கொண்டாடினார். உறவினர்கள் மற்றும் பா. ஜ., தொண்டர்கள் பலரும் அவருக்கு வாழ்த்து தெரிவித்தனர்.

டெல்லி பிருத்வி ராஜ் சாலையில் அத்வானியின் இல்லம் உள்ளது. நேற்று முன்தினம் அத்வானியின் பிறந்த நாளையொட்டி பா.ஜ., தொண்டர்கள் அவரது இல்லத்தின் முன்பாக கூடினர். தனது குடும்பத்தினரோடு பிறந்தநாளைக் கொண்டாடிய அத்வானி, கட்சித் தொண்டர்களின் வாழ்த்துக்களை ஏற்றுக் கொண்டார். முன்னாள் பிரதமர் வாஜ்பாய் நேற்று முன்தினம் அதிகாலை முதல் நபராக அத்வானிக்கு தொலைபேசி மூலம் பிறந்த நாள் வாழ்த்து தெரிவித்தார். ஜனாதிபதி அப்துல் கலாம் சார்பில் அத்வானிக்கு பூங்கொத்து அனுப்பிவைக்கப்பட்டது. இதற்காக ஜனாதிபதி மாளிகைக்கு தொலைபேசி மூலம் தனது நன்றி யை அத்வானி தெரிவித்துக் கொண்டார். பிரதமர் மன்மோகன் சிங் சார்பில் பூங்கொத்தும், பிறந்தநாள் வாழ்த்து கடிதமும் அனுப்பிவைக்கப்பட்டது. அதோடு அத்வானியை தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு பிரதமர் தமது வாழ்த்துக்களை தெரிவித்துக்கொண்டார்.

## ஈராக்கிய தீவிரவாதிகள் மீது

## அமெரிக்க படைகள் தாக்குதல்!

(பலூஜா)




ஈராக்கில் அவசரநிலை பிரகடனம் செய்யப்பட்டுள்ளதை தொடர்ந்து பலூஜா மற்றும் சமாரா நகரங்களை அமெரிக்க கூட்டணி படைகளும், ஈராக் இராணுவமும் முற்றுகையிட்டு தாக்குதல் நடத்தி வருகின்றன.

ஈராக்கில் கடந்த ஆண்டு மார்ச் மாதம் சதாம் ஆட்சி வீழ்த்தப்பட்ட பின்பு, அமெரிக்கா தலைமையிலான இடைக் கால நிர்வாகம் சிறிது காலம் இருந்தது. பின்னர் ஈராக்கிய தலைவர்களிடம் ஆட்சி ஒப்படைக்கப் பட்டு, இடைக்கால ஆட்சி நடந்து வருகின்றது. இருப்பினும் அமெரிக்க கூட்டணிப் படைகள் ஈராக்கில் தொடர்ந்து தங்கியுள்ளன.

இந்த படையினரை நாட்டை விட்டு வெளியேறக் கோரி, சதாம் ஆதரவு கொரில்லாக்கள் தாக்குதல் நடத்தி வருகின்றனர். இதன் காரணமாக ஈராக்கில் தினசரி கார் குண்டு வெடிப்புகளும், வெளிநாட்டவர் கடத்தலும் வழக்கமாகிவிட்டன.

இந்த சம்பவங்களுக்கு காரணமான கெரில்லாக்களை ஒடுக்க ஈராக் இராணுவமும், அதற்கு துணையாக அமெரிக்க கூட்டணி படைகளும் நடவடிக்கை மேற்கொண்டு வந்தன. இருப்பினும் இந்தக் கெரில்லாக்களின் அட்டகாசம் குறையவில்லை.

ஈராக் இடைக்கால பிரதமர் அலாவி, கடந்த ஞாயிறு அவசரநிலையை பிரகடனம் செய்தார். அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் ஈராக்கில் பொதுத் தேர்தல் நடைபெறும். அதற்குள்ளாக அங்கு ஸ்திரநிலையை ஏற்படுத்தும் பொருட்டு இரண்டு மாத அவசர நிலை பிறப்பிக்கப்பட்டுள்ளது. இந்தக் காலகட்டத்தில் கொரில்லாக்களின் கொட்டத்தை ஒடுக்க ஈராக் அரசும், அமெரிக்க கூட்டணிப்படைகளும் முடிவு செய்துள்ளன.

அவசர நிலை பிறப்பிக்கப்பட்ட உடன், ஈராக் இராணுவமும், அமெரிக்கப் படைகளும் பலூஜா நகரையும், சமாரா நகரையும் முற்றுகையிட்டு தாக்குதல் நடத்தி வருகின்றன. விமானம் மற்றும் பீரங்கித் தாக்குதல் தொடர்ந்து நடந்து வருகின்றன.

## பெற்றோரை பிரிந்த மாணவி

## பொலிசாரிடம் ஒப்படைப்பு

(திருப்பரங்குன்றம்)

மதுரையில் பெற்றோரை பிரிந்து பரிதவித்த கோவையை சேர்ந்த பாடசாலை மாணவி திருப்பரங்குன்றம் மகளிர் பொலிஸில் ஒப்படைக்கப்பட்டார்.

கோயமுத்தூரை சேர்ந்த தையல்காரரான இராமகிருஷ்ணன் ஞாயிறன்று தனது குடும்பத் தினரோடு கோயமுத்தூரிலிருந்து ரயிலில் மதுரை வந்தார். இவரது மூத்த மகள் கவிதா(10) கூட்ட நெரிசலில் பெற்றோரை பிரிந்து தவித்துக் கொண்டிருந்தார். பிறகு அங்கிருந்து திருமங்கலம் நோக்கி சென்ற பஸ்சில் ஏறிய கவிதா டிக்கட் எடுக்க பணம் இல்லாத காரணத்தால் திருநகரில் இறக்கி விடப்பட்டார். பஸ் தரிப்பிடத்தில் அழுது கொண்டிருந்த கவிதாவை பார்த்த சிலர் பாதுகாப்பு கருதி திருப்பரங்குன்றம் மகளிர் பாலிசில் ஒப்படைத்தனர்.இன்ஸ்பெக்டர் ராஜாமணி, எஸ். ஐ., ஹேமமா லா ஆகியோர் மாணவியிடம் பேசி தகவலை சேகரிக்க முற்பட்டனர்.

# உலக செய்திகள்

## நேபாளத்தில் மாவோயிஸ் தீவிரவாதிகள் குழந்தைகளைக் கடத்தி சென்றுள்ளனர்


(காத்மண்டு)

நேபாளத்தில் உள்ள கிராமம் ஒன்றில் பத்துக்கும் மேற்பட்ட குழந்தைகளை மாவோயிஸ்ட் தீவிரவாதிகள் கடத்திச் சென்றனர்.

நேபாளத்தின் மேற்குப் பகுதியில் தெய்லேக் மாவட்டத்தில் உள்ளது பிந்தியபாஷினி கிராமம். இரண்டு வாரங்களுக்கு முன் இக்கிராமத்திற்குள் புகுந்த மாவோயிஸ்ட் தீவிரவாதிகள் அங்கிருந்து பத்துக்கும் மேற்பட்ட குழந்தைகளை கடத்திச் சென்றனர். இது குறித்து குழந்தைகளின் பெற்றோர் கூறுகையில், கடத்திச் சென்ற மறுநாளே விட்டு விடுவதாகக் கூறிய தீவிரவாதிகள் இரண்டு வாரங்கள் சென்றும் இதுவரை குழந்தைகளை திருப்பி அனுப்பவில்லை. குழந் தைகளை எதற்காக கடத்தினார்கள் என்ற விவரம் தெரியவில்லை எனக் கூறினர். இதற்கிடையே, தாங்கள் கடத்திச் சென்ற குழந்தை களை விட்டு விட்டதாக மாவோயிஸ்ட் தீவிரவாதிகள் கூறியுள்ளனர். குழந்தைகள் எங்கு சென்றனர் என்பது குறித்து குழப்பமான நிலை நீடித்து வருகின்றது.

## அரசியல் விரோதிகளால் மனைவியை இழந்தேன்

### இம்ரானின் சோகப் பேட்டி



(சென்னை)

''எனது அரசியல் விரோதிகளின் சூழ்ச்சியால் எனது மனைவி ஜெமினா என்னை விட்டு பிரிந்து சென்று விட்டார். எனினும், மறு மணத்தில் எனக்கு ஆர்வம் இல்லை,'' என்று இம்ரான் கான் கூறியுள்ளார். பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவரும், தெக்ரீக் இன்சாப் என்ற கட்சியின் தலைவருமான இம்ரான் கானுக்கு தற்போது 52 வயதாகின்றது. இவர் இந்து ஸ்தான் ரைம்ஸ் பத்திரிகை விழாவில் பங்கேற்க கடந்த வாரம் டெல்லி வந்திருந்தார். நேற்று முன்தினம் அவர் ராஜஸ்தான் மாநிலத்தில் சுற்றுப்பயணம் மேற்கொ ண்டார். அஜ்மீர் தர்காவுக்கு சென்று வழிபட்டார். நானும் எனது மனைவி ஜெமினாவும் சந்தோஷமாகவே குடும்பம் நடத்தி வந்தோம். ஆனால், எனது அரசியல் விரோதிகளின் சூழ்ச்சிக்கு அவர் பலியாகிவிட் டார். அவர்கள் மேற்கொண்ட தவறான பிரசாரத்தின் விளைவால் விவாகரத்து வரை சென்றுவிட்டது. எனது கட்சியில் மிகவும் ஆர்வமாக செயல்பட ஜெமினா தொடங்கினார். ஆனால், அரசியல் விரோதிகள் அவரை அவமானப்படுத்தியதால் இந்த முடிவுக்கு வந்துவிட்டார். எனினு ம், நான் மறுமணம் புரியப்போவதில்லை. இந்த விஷயத்தில் உறவினர் களின் கருத்தை கேட்கவிரும்பவில்லை என இம்ரான்கான் கூறினார்.

## பழம்பெரும் நடிகை ஜி.சகுந்தலா காலமானார்

(சென்னை)

இந்தியாவின் பிரபல நடிகை ஜி. சகுந்தலா இயற்கை எய்தினார் என்ற செய்தியை அறிந்த நான் ஆழ்ந்த வருத்தம் அடைந்தேன். சிறப்பான நடிப்புத்திறன் உடையவரும் 70இற்கும் மேற்பட்ட தமிழ்த் திரைப்படங்களில் நடித்தவருமான ஜி. சகுந்தலா உடல் நிலை சரியில்லாமல் கடந்த சில வாரங்களாக மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் நேற்று முன்தினம் காலை திடீரென மாரடைப்பு ஏற்பட்டு உயிர் இழந்தார். எம்.ஜி.ஆருடன் மந்திரி குமாரியில் கதாநாயகியாக நடித்தவர். அவரது கடைசிப் படமான இதய வீணை திரைப்படமும் எம். ஜி. ஆர்., நடித்தது தான். 2002ஆம் ஆண்டிற்கான தியாக ராஜ பாகவதர் பெயரிலான கலை வித்தகர் விருதினை பெறுவதற்கு அவர் தேர்வு செய்யப்பட்டிருந்தார். அந்த விருதினை பெறுவதற்கு முன்னர் அவர் காலமானது மிகவும் துரதிருஷ்டவசமானது.

## ஜப்பானில் மீண்டும் பூகம்பம்!

## மக்கள் பெரும் பீதி அடைந்தனர்

(டோக்கியோ:)

ஜப்பானில் மீண்டும் பயங்கர பூகம்பம் ஏற்பட்டுள்ளது. கடந்த மாதம் ஏற்பட்ட பூகம்பத்தின் அதிர்ச்சியில் இருந்து மக்கள் மீளாத நிலையில், மீண்டும் மீண்டும் பூகம்பம் ஏற்பட்டுள்ளதால் பெரும் பீதி அடைந்துள்ளனர்.

ஜப்பானில் கடந்த மாதம் 23ஆம் திகதி நிகாடா பகுதியில் 6. 8 றிஜிரெர் அளவுக்கு பயங்கர பூகம்பம் ஏற்பட்டது. அதில் பல கட்டடங்கள் நொறுங்கி விழுந்தன. இடிபாடுகளில் சிக்கி 39 பேர் பரிதாபமாகப் பலியாயினர். கடந்த 95ஆம் ஆண்டு 7.2 றிஜிரெர் அள வுக்கு மிகப் பெரிய பூகம்பம் ஏற்பட் டது. அப்போது கோபே என்ற நகரி ல் 6 ஆயிரத்து 400 பேர் பலியா யினர். இந்நிலையில், டோக்கியோ வில் இருந்து 250 கி. மீ., தொலை வில் உள்ள நிகாடா பிராந்திய த்தில் நேற்று முன்தினம் பூகம்பம் ஏற்பட்டது. காலை 11. 16 மணிக்கு ஏற்பட்ட பூகம்பம், றிஜிரெர் அளவில் 5. 8 ஆக பதிவானது. அதைத் தொடர்ந்து சிறு சிறு அதிர்வுகள் தொடர்ந்த வண்ணம் இருந்தன.

இதில் சேத விவரங்கள் எதுவும் உடனடியாகத் தெரியவில்லை. நிவாரணப் பணிகளை மேற்கொள்ள அதிகாரிகள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளனர். பூகம்பத்தால் கட்டடங்கள் அதிர்ந்தன. மக்கள் பீதியில் அலறிக் கொண்டு வீதியில் ஓடினர். புல்லட் ரெயில்' போக்குவரத்து உடனடியாக ரத்து செய்யப்பட்டது. அதேபோல் நெடுஞ்சாலைப் போக்குவரத்துக்கும் தடைவிதிக்கப்பட்டது.

# மும்பை டெஸ்ட் தோல்விக்கு ஆடுகளம் மட்டும் காரணமல்ல

## — ஆஸி கிரிக்கெட் பயிற்சியாளர் ஜோன்புக்கானன் விளக்கம் —

(சிட்னி)

''மும்பை தோல்விக்கு ஆடுகளம் மட்டுமே காரணமல்ல. உலக சாம்பியன் அணி என்றால், 107 ஓட்டங்கள் எடுத்து போட்டியை ஜெயித்திருக்க வேண்டும்,'' இப்படி பேட்டி கொடுத்திருப்பவர் வேறு யாருமல்ல. அவுஸ்ரேலிய கிரிக்கெட் பயிற்சியாளரேதான்.

இந்தியாவுக்கு எதிரான மும்பை டெஸ்ட் தோல்விக்கு மோசமான ஆடுகளம்தான் காரணம் என்று அவுஸ்ரேலிய கிரிக்கெட் தலைவர் ரிக்கி பொண்டிங், மெக்ராத் உள்ளிட்ட அந்த அணி வீரர்கள் அனைவரும் புகார் தெரிவிக்கின்றனர். ''ஆடுகளம் மட்டுமே காரணமல்ல'' என்ற எதிர்குரலும் அவர்கள் தரப்பில் இருந்தே வருகிறது. ஆடுகளம் மீதுபழி சுமத்தும் தனது வீரர்களுக்கு ''டோஸ்'' கொடுக்கிறார் அவுஸ்ரேலிய கிரிக்கெட் பயிற்சியாளர் ஜோன் புக்கானன். அவர் அளித்த பேட்டி:

இந்தியாவுக்கு எதிரான முதல் மூன்று டெஸ்ட் போட்டிகள் முடிந்ததும், எங்கள் வீரர்கள் சுழல் பந்து வீச்சை சிறப்பாகச் சமாளிக்கத் தெரிந்து விட்டார்கள் என்று நினைத்தேன். ஆனால், எனது நம்பிக்கையை மும்பை டெஸ்ட் தகர்த்து விட்டது. சுழல் பந்து வீச்சில் இன்னும் சுமார்தான் என்று எங்கள் வீரர்கள் நிரூபித்து விட்டனர். 107 ஓட்டங்கள் என்பது பெரிய இலக்கல்ல. சும்மா ஆடுகளத்தை மட்டுமே குறை சொல்லக்கூடாது. நீங்கள் உலகச் சாம்பியன் என்றால், சுழல் பந்து வீச்சை சமாளித்து ஜெயித்துக் காட்டியிருக்க வேண்டும்.

ஆடுகளம் கொஞ்சம் மோசம்தான். அதை நான் மறுக்கவில்லை. அதுதொடர்பாக ஐ. சி. சி. , விசாரணை நடத்தும் என்று எதிர்பார்க்கிறேன். கட்டாயம் விசாரணை நடத்த வேண்டும். ஆனால், எங்கள் தோல்விக்கு ஆடுகளம் மட்டுமே காரணம் என்று நான் சொல்லவே மாட்டேன். நான் மட்டுமல்ல யாருமே சொல்லமாட்டார்கள். முதல் இன்னிங்சில், அதே ஆடுகளத்தில்தானே எங்கள் வீரர்கள் பெரிய ஸ்கோர் செய்தார்கள்?

மும்பை போட்டியைப் பொறுத்த வரை, சச்சின் டெண்டுல்கர் ஆட்டம் பிரமாதம். அதேசமயம், எங்களுக்குப் பிரச்சினை தந்தவர் லட்சுமண். இழந்த திறமையைத் திரும்பப் பெற்றுவிட்டார் அவரால். இந்தியா ஒரே டெஸ்டில் ஜெயித்திருக்கிறது. அந்த டெஸ்டில் லட்சுமண் சிறப்பாக விளையாடியிருக்கிறார். எங்களுக்கு எதிரான போட்டிகளில் அவர் தொடர்ந்து ஆதிக்கம் செலுத்துகிறார். எதிர்காலத்தில் இந்த இரு வீரர்களையும் (சச்சின், லட்சுமண்) கட்டுப்படுத்த ஏதாவது சிறப்பு வியூகங்களை வகுக்கவேண்டியது அவசியம். இவ்வாறு தெரிவித்துள்ளார் ஜோன் புக்கானன்.

## நியூஸ்டார் விளையாட்டுக் கழகம் நடப்பு வருட சம்பியனாகத் தெரிவு

(அட்டாளைச்சேனை நிருபர்)

அட்டாளச்சேனை மக்கள் வங்கிக் கிளையின் அனுசரணையில் அம்பாறை மாவட்டத்திலுள்ள முன்னணி விளையாட்டுக் கழகங்களைக் கொண்டு மர்ஹூம் எம்.எச்.எம்.அஷ்ர∴ப் அவர்களின் நான்காவது வருட நினைவையொட்டி அட்டாளைச்சேனை கிரிக்கெட் கழகத்தினால் மட்டுப்படுத்தப்பட்ட 05 ஓவர்கள் கொண்ட 06 வீரர்கள் உள்ளடக்கியதாக அண்மையில் நடாத்தப்பட்ட மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் அட்டாளைச்சேனை நியூஸ்டார் விளையாட்டுக் கழகம் 2004 ஆம் ஆண்டிற்கான சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

அட்டாளைச்சேனை பொது மைதானத்தில் நடைபெற்ற இச்சுற்றுப் போட்டித் தொடரில் 20 இற்கும் அதிகமான கழகங்கள பங்கு பற்றின. இதன் இறுதிப் போட்டிக்கு அக்கரைப்பற்று பீ.எஸ்.ஸி. அணியும், அட்டாளைச்சேனை நியூஸ்டார் அணியும் தெரிவாகி போட்டியில் ஈடுபட்டன.

இறுதிப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய அக்கரைப்பற்று பீ.எஸ்.ஸி. அணியினர் அவர்களுக்கு வழங்கப்பட்ட 05 ஓவர்கள் நிறைவின் போது 52 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டனர்.




## இந்திய அணியின் தலைவர் கங்குலியின் உடல் நிலை தேறிவருகிறது

(கோல்கட்டா)



ரஞ்சி கிண்ண கிரிக்கெட்டில் துடுப்பெடுத்தாடிய கங்குலி உடல் தகுதி சோதனையில் தேறிவிடுவார் என தெரிகிறது. இந்திய அணியின் தலைவர் கங்குலிக்கு சமீபத்தில் தொடைப் பகுதியில் தசைப் பிடிப்பு ஏற்பட்டது. இதனால் இவர் அவுஸ்ரேலியாவுக்கு எதிரான நாக்பூர், மும்பை டெஸ்டில் பங்கேற்க இயலவில்லை.

வரும் 10ல் இவருக்கு உடல் தகுதி சோதனை நடக்கின்றது. இதில் தேறினால் மட்டுமே வரும் 13ல் நடக்கும் பாகிஸ்தானுக்கு எதிரான ஒரு நாள் போட்டியில் பங்கேற்க இயலும்.

இதற்கிடையே துடுப்பாட்டப் பயிற்சி பெறும் நோக்குடன்,மேற்கு வங்க அணிக்காக ரஞ்சி கிண்ண போட்டியில் விளையாட முடிவு செய்தார் கங்குலி.

கர்நாடகா அணிக்கு எதிரான இப்போட்டியில் நேற்று முன்தினம் இவர் எவ்வித சிரமுமின்றி துடுப்பெடுத்தாடினார்.

விக்கெட்டுகளுக்கு இடையே விரைவாக ஓடிய இவருக்கு ''ஷொட்'' அடிப்பதிலும் எவ்வித சிக்கலும் ஏற்படவில்லை. 7வது விக்கெட்டுக்கு சவுராஷிஷ்கரியுடன் ஜோடி சேர்ந்து 57 ஓட்டங்கள் சேர்த்தார். ஆட்டத்தின் 8வது ஓவரில் 27 ஓட்டத்திற்கு வினய் குமாரின் பந்துவீச்சில் ஆட்டமிழந்தார். 115 நிமிடங்கள் களத்தில் நீடித்த கங்குலி 76 பந்துகளை சந்தித்தார்.

## உதைபந்தாட்டச் சம்பியனாக தெ.கி.பல்கலைக்கழகம் தெரிவு

(விரி)

இலங்கையின் பல்கலைக்கழகங்களுக்கிடையிலான எட்டாவது விளையாட்டுப் போட்டியில் உதைபந்தாட்டச் சம்பியனாக தென்கிழக்குப் பல்கலைக்கழகம் தெரிவாகி சாதனைபடைத்துள்ளது.

இரண்டாம் இடத்தை கிழக்குப் பல்கலைக்கழகமும், மூன்றாமிடத்தை யாழ்பாணப் பல்கலைக்கழகமும் பெற்றுக் கொண்டன. அதன்படி வரலாற்றில் முதல் தடவையாக உதைபந்தாட்டப் போட்டியில் முதல் மூன்று இடங்களையும் வட-கிழக்கிலுள்ள பல்கலைக்கழகங்கள் சுவீகரித்துக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# எங்கள் குரல்

## பழுகாமம்—2, வன்னிநகர் பிரிவுக்குள் இரு ஆறுகள் பெருக்கெடுத்துள்ளன

பழுகாமம்-2, வன்னிநகர், வீரச்சேனை பொது வீதியும், வெள்ளிமலைப் பிள்ளையார் கோவில் வீதியும் தொடர்ந்து பெய்த மழை காரணமாக ஆறாகக் காட்சியளிக்கின்றன. குடியிருப்புகளைவிட பாதை தாழ்வாகக் காணப்படுவதால் குடியிருப்புகளில் இருந்து வரும் நீர் முழுவதும் பாதையூடாகவே ஓடுகின்றன. அத்தோடு மணல் வீதியாகக் காணப்படுவதாலும் சரியாக செப்பனிடாமல் இருப்பதனாலும் குன்றும், குழியுமாகக் காணப்படுகின்றது. இக்குன்று, குழிக்குள் வெள்ளம் தேங்கிக் காணப்படுகின்றது. இதனால் பாடசாலை மாணவர்கள் பெரிதும் பாதிப்புக்குள்ளாகின்றனர். போக்குவரத்தும் பெரிதும் ஸ்தம்பிதமடைந்துள்ளது. இந்தப் பிரதேசத்து மக்களின் நன்மை கருதி இந்த பிரதான வீதிகளைச் செப்பனிட்டுத் தருமாறு ஈழநாதமூடாக கேட்டுக் கொள்கின்றேன்.

**எஸ்.பவா**

## சீரழிந்த நிலையில் காணப்படும் கொக்கட்டிச்சோலை கிராம வீதிகள்

பட்டிப்பளை பிரதேச செயலகத்துக்குட்பட்ட கொக்கட்டிச்சோலை கிராமத்தில் வசிக்கும் மக்கள் ஈழநாதமூடாக தமது அனைத்து வீதிகளின் நிலைபற்றியும் மீண்டும் சுட்டிக்காட்டுகின்றனர்.

இக்கிராமத்தில் அமைந்திருக்கும் பிரதான வீதி உட்பட உள்வீதிகள் அனைத்தும் தற்போது பெய்துவரும் அடைமழையினால் நீரில் மூழ்கிக் காணப்படுகின்றன. இதனால் இக்கிராம மக்கள் உட்பட இங்கு அரச கடமையின் நிமிர்த்தம் வரும் அரச ஊழியர்கள், ஏனைய வெளியூர் பிரயாணிகள் அனைவரும் பல சிரமங்களுக்கு மத்தியில் தமது பிரயாணத்தை மேற்கொள்வதை தினமும் காணலாம் என மக்கள் அங்கலாய்க்கின்றனர். இவ்வீதிகள் அனைத்தும் பள்ளமாகவும், குன்றும், குழியுமாகவும் காட்சியளிப்பதுடன் குழிகளில் நீர் தேங்கி நிற்கின்றமையையும் காணமுடிகின்றது. இதனால் நுளம்புகளின் பெருக்கம் அதிகரித்துள்ளதுடன் மலேரியா, டெங்கு போன்ற நோய்கள் பரவும் அபாயமும் தென்படுகின்றது எனவும் இம்மக்கள் கூறுகின்றனர்.

எனவே இக்கிராம மக்களின் நன்மை கருதி கருதியும், ஏனைய பிரதேசத்தைச் சேர்ந்த பயணிகள் நலன்கருதியும் இவ்வீதியை புனரமைப்பதற்குரிய வழிவகைகளை பிரதேச செயலாளரும், பிரதேசசபையினரும் மேற்கொள்ள வேண்டும்.

**சசிரேகா**

## குன்றும், குழியுமாகக் காணப்படும் திருக்கோவில், தம்பிலுவில் பிரதான வீதிகள்

திருக்கோவில், தம்பிலுவில் பகுதிகளின் பிரதான வீதிகள் குன்றும், குழியுமாகக் காணப்படுவதுடன் மழை காலங்களில் குழிகளுக்குள் நீர் தேங்கியும் நிற்கின்றது. இதனால் டெங்கு நுளம்புகளின் பெருக்கம் ஏற்பட்டு மக்களுக்கு டெங்கு நோய் பரவும் அபாயம் தென்படுவதாக இப்பகுதி மக்கள் கூறுகின்றனர்.

மேலும் இப்பிரதான வீதிகள் இரவு வேளையில் இருள்மண்டிக் காணப்படுகின்றது. காரணம் இவ்வீதிகளில் இருக்கின்ற மின்கம்பங்கள் ஒன்றில் கூட மின்குமிழ்கள் ஒளிர்வதில்லை. இதனால் இவ்வீதி இருள் சூழ்ந்தே காணப்படுகின்றது என மக்கள் விசனமடைந்துள்ளனர்.

திருக்கோவில், தம்பிலுவில் வீதிகளின் நிலைமை பற்றியும், வீதியில் வீதி விளக்குகள் பொருத்தப்படாமை பற்றியும் இப்பகுதி பிரதேச சபையினரின் கவனத்திற்குக் கொண்டுவந்தும் அவர்கள் எதுவித நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை.

எனவேதான் பத்திரிகையூடாகத் தெரியப்படுத்தினாலாவது செய்வார்கள் என்ற நம்பிக்கையில் ஈழநாதம் எங்கள் குரல் பகுதிக்கு இதனைச் சுட்டிக்காட்டுகின்றோம். என இம்மக்கள் தெரிவித்துள்ளதுடன் இது சம்மந்தமான விளக்கத்தைப் பத்திரிகையூடாகத் தெரியப்படுத்த பிரதேச சபையினர் முன்வருவார்களா? எனவும் கேள்வி கேட்கின்றனர்.

மேலும் இப்பகுதி மக்கள் இது சம்மந்தமாக கூறுகையில் பிரதேச சபையினர் இதற்கு நடவடிக்கை எடுக்காத பட்சத்தில் இன்னும் சில வாரங்களுக்குள் அரசாங்க அதிபர் கவனத்திற்கு கொண்டுவரப்படும் எனவும் ஈழநாதத்திற்குச் சுட்டிக்காட்டுகின்றனர்.

**சீலன்**
**திருக்கோவில்**

## எதுவித அபிவிருத்திப் பணியும் இன்றி காணப்படும் கரவாகு மேற்கு பொதுநூலகம்

கல்முனை தமிழ் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள மாநகரசபையின் நிர்வாகத்தின் கீழ் இயங்கிவரும் கரவாகு மேற்கு பொது நூலகம் எதுவித அபிவிருத்திகளும் இன்றி மிகவும் பாழடைந்து கவனிப்பாரற்ற நிலையிலிருந்து வருகின்றது.

அத்துடன் வாசகர்களுக்குத் தேவையான பத்திரிகைகள், சஞ்சிகைகள், புத்தகங்கள், மாணவர்களுக்குரிய பாடப்பயிற்சிப் புத்தகங்கள் ஆகியவை இந்நூல் நிலையத்திற்குப் புதிதாக வழங்கப்படாமையால் வாசகர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டு நூலக ஊழியர்களுடன் முரண்பட்டுக் கொண்டுவருகின்றனர்.

இந்த நூலகக் கட்டடங்கள் வெடிப்புக்களுடனும், களஞ்சிய அறை, மற்றும் மலசலகூடங்களின் கதவுகள் சிதைவடைந்த நிலையிலும், நிலத்தரைகளும் சிதைவுற்றும் காணப்படுகின்றது. அத்துடன் மிகவும் நீண்டகாலமாக இந்நூலகத்திற்கென வழங்கப்பட்ட தொலைபேசியையும் மாநகரசபை ஆணையாளரால் அபகரிக்கப்பட்டுள்ளது. என இந்நூலகத்திற்கு வருகை தரும் வாசகர்கள் ஈழநாதத்திற்கு தெரிவிக்கின்றனர்.

இத்தொலைபேசி நூலகத்தில் இருந்த போது நூலகத்திற்கு அண்மையிலுள்ள வைத்திய சாலை, கமநலகேந்திர நிலையம், கூட்டுறவுக்கிளை ஆகியவற்றுக்கும் இத்தொலைபேசி இணைப்பு பெரிதும் உதவியது. அதனால் தற்போது தொலைபேசி தொடர்பற்று இந்நூல் நிலையம் காணப்படுகின்றது.

மேலும் இந்நூலகம் அமைந்துள்ள இடம் கஷ்டப் பிரதேசம் ஆகையால் இந்நூல் நிலையத்திற்கு தொலைபேசி மிக மிக அவசியம் என வாசகர்கள் கூறுகின்றனர்.

இத்தொலைபேசி துண்டிக்கப்பட்டமை பற்றி வாசக குழுவினருக்கும், மாநகர ஆணையாளருக்கும் இடையில் அண்மையில் பேச்சுவார்த்தை இடம் பெற்றபோதிலும் இதற்குரிய சுமுகமான தீர்வு எட்டப்படவுமில்லை. இதுவரை தொலைபேசி இணைப்பு கிடைக்கவுமில்லை என வாசகர்கள் கவலையடைகின்றனர்.

இது விடயமாக வாசகர்கள் ஈழநாதத்திற்கு மேலும் தெரிவிக்கையில் ஏனைய நூலகங்களில் உள்ள தொலைபேசிகளை இவ்வாறு அபகரிக்காமல் ஏன் இந்த நூலகத்து தொலைபேசியை மட்டும் அபகரித்துவிட்டனர் என கேள்வி கேட்கின்றனர்.

**அ.தர்மா**

**சிந்தனைக்கு**



சுதந்திரம் என்பது பேரம் பேசிப் பெற்றுக் கொள்ளும் ஒரு வியாபாரப் பண்டமல்ல. அது இரத்தம் சிந்தி வெற்றி கொள்ளப்படும் ஒரு புனிதமான உரிமை.

மேதகு. வே.பிரபாகரன்.
தமிழீழத் தேசியத் தலைவர்

ஈழநாதம்
கிழக்குப்பதிப்பு EEZHANATHAM
பிரதான வீதி, கொக்கட்டிச்சோலை.
தொலைபேசி :- 065-2226110,
batti@eezhanatham.com
10-11-2004

# மீனவர் அத்துமீறலில் மறைந்திருக்கும் சதி !

இந்திய மீனவர்கள் மன்னார் கடற்பகுதிக்குள் அத்து மீறி மீன் பிடித்ததாகக் கூறி கடந்த சில நாட்கள் பேசாலை மீனவர்கள் போராட்டம் நடத்திவிருந்தனர்.

சுமார் 2500க்கும் மேற்பட்ட இழுவை மீன் பிடிப்படகுகளில் வந்த இந்திய மீனவர்கள் பேசாலை மன்னார் கடற்பகுதியிலிருந்து சுமார் 50 யார் தொலைவில் மீன்பிடித்து சென்றுள்ளனர். இதனால் மன்னார் மீனவர்களின் கடல் வளங்கள் அபகரிக்கப்படுவதுடன் பெரும் பாதிப்படைந்துள்ளதாக தெரிவித்துள்ளனர்.

ஆனால் இந்த விவகாரத்தில் ஒரு சதி நடைபெற்றுள்ளதாக கருத இடமுண்டு. தமிழகத் தமிழர்களும் ஈழத் தமிழர்களுக்கு மிடையில் பகமை உணர்வைத் தூண்டி ஒரு விரிசல் நிலையை ஏற்படுத்துவதற்கான சதித்திட்டமே இந்திய மீனவர்களின் அத்து மீறலாகும்.

சிறிலங்கா கடற்படையினர் இந்தியக் கடற் பரப்புக்குள் அத்து மீறுகின்றார்கள். அவர்கள் இந்திய மீனவர்களை கைது செய்கின்றார்கள். இந்திய மீனவர்களின் படகுகளை அபகரித்துச் செல்கின்றார்கள் என்ற குற்றச்சாட்டு இந்திய மீனவர்களுக்குள்ளது.

சிறிலங்கா கடற் படையின் அத்துமீறல்களைக் கண்டித்து இராமேஸ்வரம் மீனவர்கள் வேலைப் பகிஸ்கரிப்பு போராட்டத்தில் அண்மையில் ஈடுபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. தற்போது ஈழத்து மன்னார்ப் பிரதேச மீனவர்கள் இந்திய மீனவர்களின் அத்துமீறலைக் கண்டித்துப் போராட்டம் நடத்துகின்றனர். தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் ஆரம்பத்தில் சிறிலங்கா இராணுவம் ஈழத் தமிழினத்தின் மீது கட்டவிழ்த்து விட்ட அரச பயங்கர வாத நடவடிக்கைகளுக்கு எதிராக தமிழகம் தமது உணர்வுகளை வெளிப்படுத்தியிருந்தது.

தமிழர் தாயக மண்ணில் சிங்கள விமானப் படை விமானங்களின் குண்டு வீச்சில் எரிகணைத் தாக்குதலில் தமிழினத்தின் உயிர் பறிக்கப்பட்ட போது தமிழகம் கொதித்து எழுந்தது.

தமிழகத்தில் கடையடைப்பு, கர்த்தால், வீதி மறியல் போராட்டம், கண்டனப் பேரணி எனக் காரசாரமான வகையில் உணர்வுகளை வெளிப்படுத்தியதுடன் தமிழக அரசுக்கும் அழுத்தங்களைக் கொடுத்தமை குறிப்பிடத்தக்கது. எனினும் இந்த உறவு சில காலம் பெரும் இடை வெளியை ஏற்படுத்தியிருந்தமையும் இங்கு சுட்டிக்காட்ட வேண்டும்.

சமகாலத்தில் ஈழத் தமிழினத்திற்கு பாதிப்புக்களை ஏற்படுத்தும் வகையில் சிறிலங்கா அரசும், இந்தியாவும் பாதுகாப்பு ஒத்துழைப்பு ஒப்பந்தத்தில் கைச்சாத்திடவுள்ளன. சிறிலங்காவிலும் இந்து சமுத்திர கடற்பிராந்தியத்திலும் வல்லாதிக்கத்தை அதிகரிக்கச் செய்யும் நோக்கோடு இந்தியாவும் தமது படை வலுமையை அதிகரிக்கச் செய்யும் வகையில் சிறிலங்காவும் கைச்சாத்திடப்படவிருக்கும் ஒப்பந்தம் தமிழகத்தில் உள்ள சில அரசியல் கட்சிகள் மத்திய அரசுக்குக் கொடுத்த அழுத்தத்தினால் பின்னகர்த்தப்பட்டுள்ளன.

இந்த நிலையில் ஈழத் தமிழர்களும் தமிழகத் தமிழர்களும் ஒரே வீட்டுப் பிள்ளை போல் உறவு கொண்டிருப்பதை சிங்கள ஆட்சியாளர்கள் விரும்பவில்லை. ஏதோ ஒரு வகையில் பகமை உணர்வுகளை ஊட்டி மாற்றாந் தாய் மனப் பான்மையை அதிகரிக்கும் மனப்பக்குவத்தை உருவாக்கும் சூழ்ச்சித்திட்டமே பேசாலைக் கடலில் தமிழக மீனவர்களை அத்து மீறவிட்ட சம்பவமாகும்.

எனவே தமிழக மீனவர்களும் தமிழர் தாயக மீனவர்களும் பரஸ்பரம் புரிந்துணர்வுடன் கடல் தொழிலை மேற்கொள்வது எதிர் காலத்தில் ஆரோக்கியமானதாக அமையும். தமிழகம் ஈழத் தமிழினம் மீது பரிவு காட்டும் பக்குவத்தை உருவாக்க வேண்டும். போரினால் பொருளாதாரம் வலுவிழந்திருக்கும் ஈழத் தமிழினத்தின் கடல் வளங்களை அபகரிக்கும் நடவடிக்கைகளை எதிர் காலத்தில் மேற்கொள்ளாது இருக்க வேண்டும்.

# இடைக்கால தன்னாட்சி அதிகார சபைக்கு குரல் கொடுப்பதே எமது முக்கிய கடமை

## பாராளுமன்ற உறுப்பினர் பா. அரியநேத்திரன்

(கிரிஜா, பிரிந்தினி)

**இடைக்கால தன்னாட்சி அதிகார சபைக்காகக் குரல் கொடுப்பதே பாராளுமன்ற உறுப்பினர்களாக தெரிவாகியுள்ள எமது முக்கிய கடமையாகும்.**

இவ்வாறு நேற்றுப் பட்டிப்பளை அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் நடை பெற்ற பரிசளிப்பு விழாவில் கலந்து கொண்டு உரை யாற்றிய மட்டக்களப்பு மாவட்ட தமிழ்த் தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் தெரிவித்தார்.

பாடசாலைஅதிபர் ஆ. சிவசம்பு தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் தொடர்ந்து உரை யாற்றிய பாராளுமன்ற உறுப்பினர் இடைக்கால தன்னாட்சி அதிகார சபையை சிறிலங்கா அரசு எமக்கு வழங்கினால் அதன் மூலம் வெளி நாட்டு உதவிகளைப் பெற்று எமது வடக்குக் கிழக்குப் பிரதேசத்தை அபிவிருத்தி செய்யமுடியும். ஆனால் சிறிலங்காவின் பேரினவாதக்கட்சிகள் இடைக்கால தன்னாட்சி அதிகார சபை விடயத்தில் மாற்றுக் கருத்துக்களை தெரிவித்துக் கொண்டிருக்கின்றன.

எனவே இதனைப் பெறுவதற்கு எமது பலம் முக்கியம் இது இன்று எம்மிடம் உள்ளது. எமது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள். 22 பேரும் ஒன்றிணைந்து செயற்படுகின்றனர். இதற்கு உதாரணமாக கல்வியில் முன்னேறிய மாவட்டமாக மட்டக்களப்பு மாவட்டம் அரசினால் பிரகடனப் படுத்தப்பட்டபோது 22 பாராளுமன்ற உறுப்பினர்களும் ஒன்றிணைந்து குரல் கொடுத்ததினால் இன்று அது பின்தங்கிய மாவட்டமாக அரசினால் பிரகடனப் படுத்தப்பட்டுள்ளது. இதுபோன்று எமது பலம் ஒன்றினையும் போதே எமது உரிமையை வென்றெடுக்க முடியும் என்றார். கோட்டக் கல்விப் பணிப்பாளர் தயாசீலன், உதவிக் கல்விப்பணிப் பணிப்பாளர் உலகேஸ்வரன், பட்டிப்பளை ஆசிரியர் பயிற்சி முகாமையாளர் குருபரன், ஆகியோர் கலந்து கொண்டனர்.

# தமிழீழ காவல்த் துறையினரால் வீதிப்போக்குவரத்து அறிவுறுத்தல்

(எம். யுவராஜ்)

தமிழீழக்காவல் துறையினரின் வாகனப் போக்குவரத்துப் பிரிவினரால் வீதிப்போக்குவரத்துத் தொடர்பான கலந்துரையாடல் நிகழ்வு நேற்று முன்தினம் கிரிநொச்சி வருவாய்ப் பகுதிப் பொறுப்பாளர் நல்லையன் தலைமையில் நடைபெற்றது.

பி.ப 3மணி தொடக்கம் 4மணிவரை நடைபெற்ற இக் கலந்துரையாடலில் தமிழீழ காவல் துறையின் வாகனப் போக்கு வரத்துப் பிரிவுப் பொறுப்பாளர் சி. சிவகுமாரன், துணைப் பொறுப்பாளர் ஜீவானந்தம் ஆகியோர் வீதிப் போக்குவரத்து மற்றும் பாதசாரிகள், துவிச்சக்கரவண்டி ஓட்டுனர்கள், சாரதிகள் வீதியின் விதி முறைகள் பின்பற்றும் விடயங்கள் மற்றும் சைகைகள், தொடர்பாக எடுத்துக் கூறப்பட்டது. இதில் சுமார் 75க்கும் மேற்பட்ட வருவாய்ப்பகுதிப் பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

# இலங்கையில் கலை இலக்கியத் துறைக்கு பங்காற்றிவரும் தென்கிழக்கு ஆய்வுமையம்

(நமது நிருபர்)

இலங்கையின் கலை இலக்கியத் துறைக்கும் இன ஐக்கியத்திற்கும் பங்காற்றி வரும் நல்ல சிந்தனையுள்ள தனித்துவமான இயக்கமாக தென்கிழக்கு ஆய்வு மையம் விளங்குகின்றது.

கடந்தகாலங்களில் கலை இலக்கிய பண்பாட்டுத் துறைகளுக்குப் பணியாற்றிய ஐம்பதுக்கும் அதிகமானோரை அவர்கள் உயிரோடு இருக்கும் போதே பொன்னாடை போர்த்தி கௌரவித்துள்ளது. குறிப்பாக மர்ஹூம் அ.ஸ அப்துஸ்ஸமது முதல் ஈழத்துப் பூ ராடனார், செல்வராஜகோபால், கவிச் சுடர் அன்பு முஹையத்தீன், அன்னலட்சுமி இராசதுரை, வி.தேவராஜ், ஏ.எல்.எம். ஸலீம், என்.எம். அமீன், மர்ஹூம் எம். ஐ அப்துர்ர ஸ்ஸாக் உட்பட பலர், ஆற்றிய பணிக்காகக் கௌரவிக்க ப்பட்டுள்ளனர்.

தொடர்ந்தும் அவ்வாறான நிகழ்வுகள் இடம் பெறும் என்பதற்கு இன்றைய நிகழ்வு சான்றாகும். சமூக,சமய இன பேதங்களுக்கு அப்பால் இடம்பெறும் இவ்வாறான நிகழ்வுகள் தொடர்ந்தும் இன ஐக்கியத்தை வலியுறுத்தும் நிகழ்வுகளாக நாம் கொள்ள வேண்டும்.

இவ்வாறு அண்மையில் கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரியில் நடைபெற்ற இலக்கியப் பெருவிழாவில் கலந்து கொண்ட தென்கிழக்குப் பல்கலைக்கழக மொழிகள் கலாசாரத் துறைத் தலைவர் கலாநிதி மௌலவி கே. எம். எச்.காலிதீன் தெரிவித்தார்.

தென்கிழக்கு ஆய்வுமைய த்தின் ஏற்பாட்டில் நடை பெற்ற இந்நிகழ்வில் தொடர்ந்து உரையாற்றிய காலிதீன்

நூல்வெளியீடுகளையும் அவ்வப்போது தென்கிழக்கு ஆய்வு மையம் தனது பணியாகக் கொண்டு செயற்படுகின்றது. இவ்வகையில், இதன் தலைவர் இக்பால் அலி ஆசிரியராக இருந்து, மர்ஹூம் கலாநிதி அல்ஹாஜ் எம். எச்.எம். அஷ்ரஃப் பிரதம அதிதியாக விளங்கி கொழும்பு தாருஸ் ஸலாத்தில் ''இலங்கை முஸ்லிம்களின் வரலாற்றில் கலாநிதி காலிதீன்'' என்னும் நூலும், பேராதனைப் பல் கலைக்கழக மெய்யியல் துறை முதுநிலை விரிவுரையாளரான கலாநிதி எம்.எஸ்.எம் அனஸ் அவர்களைப் பதிப்பாசிரியராகக் கொண்டு வெளிவந்த ''ஷிக்வா'' (முறையீடு) கவியரங்குக் கவிதைத் தொகுதி, பேராதனைப் பல்கலைக் கழக மெய்யியல் விரிவுரையாளர் பி.எம்.ஜமாஹிர் அவர்களின் ''உளவியல் ஓர்அறிமுகம்'' மெய்யியலும் சமயமும் ஆகிய நூல்களும் பி.எம். அமூபக்கர் அவர்களை ஆசிரியராகக் கொண்டு எழுதப்பட்ட ''அரசியல் ஓர் அறிமுகம்'', இனமுரண்பாடுகள்'' என பனவும் , பேராசிரியர் வி.கே. கணேசலிங்கம் அவர்களை ஆசிரியராகக் கொண்டு எழுதப்பட்ட ''ஒரு பேராசிரியரின் கல்வி ஒழுக்கவியல்'' பற்றிய நூல்களும் தென்கிழக்கு ஆய்வுமையத்தின் வெளியீடுகளாக வெளிவந்துள்ளன.

கவிச்சுடர் மர்ஹூம் அன்பு முஹையுதீன் அவர்களுக்கு மணிவிழா எடுத்து மணிவிழா மலர் ஒன்றைத் தயாரித்ததில் தென்கிழக்கு ஆய்வுமையம் அவர் வாழ்ந்த போதே வாழ்த்தியுள்ளது. கலை இலக்கியச் சஞ்சிகைகளான , ''தென் கிழக்கு ஆய்வுமையத்தின் செய்திமடல்'',''நயனம்''போன்ற வற்றையும் அது வெளியிட்டுள்ளது. கருத்தரங்குகள், கவியரங்குகள், சமூக நல்லிணக்கப் பணிகள் ஆகியவையும் அதன் தொடர்ந்த பணிகளில் அடங்கும்.

# நியாப் திட்டத்தின் மையக் கிராமமாக வளத்தாப்பிட்டிக் கிராமம் தெரிவு

(விரி. சகாதேவராசா)

சம்மாந்துறைப் பிரதேச செயலகத்துக்குட்பட்ட வளத்தாப்பிட்டி மீள்குடியேற்றக் கிராமம் ''நியாப் மையக் கிராமமாக'' தெரிவு செய்யப்பட்டுள்ளது.

இங்குள்ள 93 பேருக்கு ஆடுவளர்ப்பு, மாடுவளர்ப்பு, வீட்டுத் தோட்டம், கோழிவளர்ப்பு, மீன்பிடி, நெல்குற்றிவிற்றல், சிறுகைத் தொழில் போன்ற சுயதொழிலுக்கான கடன்வழங்கப்பட்டது. அவை மாதாந்தம் அறவிடப்பட்டு வருவதாக கிராமஅபிவிருத்தி உத்தியோகத்தர் எம். ஏஸீ. யூசுப்லெவ்வை தெரிவித்தார்



அண்மையில் மட். களுவன்கேணி விவேகானந்தா வித்தியாலய மாணவ மாணவிகளுக்கான முதலுதவிப் பயிற்சிப்பட்டறை செயின் ஜோன் அம்புலன்ஸ் முதலுதவிப் பயிற்சிப் பிரிவினரால் நடாத்தப்பட்டது. மாணவர்களுக்கு விரிவுரையினை மாவட்ட தாதிப் பிரிவு அதிகாரி எஸ். றெபேகா வழங்குவதையும். செய்முறைப் பயிற்சிகளினை மாவட்ட அதிகாரி எம்.பீ.எம் றிபாஸ் செய்து காண்பிப்பதனையும், பயிற்சிப் பட்டறையில் கலந்து கொண்ட முதலுதவியாளர்களுடன் மட்டக்களப்பு மாவட்ட ஆணையாளர் ஐ.எல்.ஜலீல் (பயிற்விப்பாளர்) இணைந்து எடுத்துக் கொண்ட படத்தினைக் காணலாம். (வி.ரி.சகாதேவராசா)

ஈழநாதம்
மட்டக்களப்பு பதிப்பு மக்கள் நாளிதழ்
Eezhanatham

# காத்தான்குடி மார்க்கப் பிரச்சினை தீர்வுக்கு முஸ்லிம் அமைப்புக்கள் மகிழ்ச்சி

(ஏ.எல்.எம்.சலீம்)

காத்தான்குடியில் கடந்த 25 வருட காலமாக நிலவிவந்த மார்க்கப் பிரச்சினை தொடர்பில் ஏற்பட்டுள்ள சமாதானம் தொடர்பாக பல்வேறு முஸ்லிம் அமைப்புக்களும் மகிழ்ச்சியும், பாராட்டும் தெரிவித்துள்ளன.

இந்தவகையில் மருதமுனை உலைமாசபை சார்பில் மருதமுனை உலைமா சபையின் தலைவரும், தென்கிழக்குப் பல்கலைக் கழக சிரேஸ்ட விரிவுரையாளருமான எம்.எல்.எம். ஜலால்தீன் சமாதான நிகழ்வுக்கு வாழ்த்துத் தெரிவித்து அறிக்கை ஒன்றை விடுத்துள்ளார்.

இந்த அறிக்கையில் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது:-

கடந்த 25 வருடங்களுக்கும் மேலாக காத்தான்குடியிலும், மருதமுனையிலும் தொடர்ந்து இடம்பெற்று வரும் தனிப்பட்ட சிலரின் மார்க்க விரோத பிரச்சாரங்கள், அதன் மூலமாக பல்வேறு காலகட்டங்களில் இடம்பெற்ற சமூக, சமய முரண்பாடுகள், வன்செயல்கள், பல்வேறு பிரிவினைகளையும் மருதமுனை உலமா சபை மட்டுமல்ல, இலங்கை வாழ் முழு முஸ்லிம் ``உம்மத்''தே மிகவும் கவலையுடன் எதிர்கொண்டு வந்தது. அதுவும் அண்மைக்காலத்தில் புனித ரம்ழான் மாதத்தில் காத்தான்குடியில் ஏற்பட்ட கலவரங்கள், வன்செயல்கள், கோஷ்டி மோதல்கள், ஆயுதப் பிரயோகம், குண்டு வீச்சு போன்ற சம்பவங்கள் இலங்கை வாழ் முஸ்லிம்களிடையே மனக்கிலேசத்தை ஏற்படுத்தியிருந்தன. மருதமுனை அப்துல்லா பயில்வான், மருதமுனை உலமாசபைக்கு எதிராக தொடர்ந்து வழக்கை, கல்முனை மாவட்ட நீதிமன்றம் தள்ளுபடி செய்ததன் மூலம் மருதமுனை உலமாசபை வழக்கில் வெற்றிபெற்ற அல்லாஹ்வின் அருள் செய்தியோடு, காத்தான்குடியில் மார்க்க விரோத செயல்கள் ஒரு கட்டுப்பாட்டுக்கு கீழ் கொண்டு வரப்பட்டு அங்கு முஸ்லிம் மக்களிடையே சாந்தியும், சமாதானமும் ஏற்பட வழிசெய்யப்பட்டமை உண்மையில் ஒரு வரலாற்று நிகழ்வாகும்.

இச்சமாதானம் மலர்ந்திடவும், இஸ்லாத்தின் சத்தியப் போதனை மீண்டும் ஒரு முறை சாதித்திடவும் அருள் பாலித்த எல்லாம் வல்ல அல்லாஹ்வுக்கு இச் சமூகத்தின் சார்பில் நன்றி தெரிவிப்பதோடு, இதற்காக உழைத்த தலைவர்கள், உலமா சபையினர், பெரியார்கள், பள்ளிவாயல் நிர்வாகிகள், மௌலவி அப்துல்ராவூப், அணியைச் சேர்ந்த உலமாக்கள், பெரியார்கள், காத்தா ன்குடி இளைஞர்கள், பொதுமக்கள், அனைவருக்கும் மருதமுனை உலமா சபை தனது இதயபூர்வ மான நன்றியையும், வாழ்த்தையும், தெரிவிப்பதோடு, அவர்களுக்கான ``துஆ'' வையும் வல்ல அல்லாஹ்விடம் சமர்ப்பிக்கின்றது"

இவ்வாறு அந்த அறிகையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கிளிநொச்சியில் தமிழீழ சட்டக் கல்லூரி இன்று திறப்பு!

(நமது நிருபர்)

கிளிநொச்சியில் புதிதாக அமைக்கப்பட்ட தமிழீழ சட்டக் கல்லூரி இன்று காலை 10.00 மணிக்கு திறந்து வைக்கப்படவுள்ளது.

இந்நிகழ்வில் பொதுச்சுடர் ஏற்றல் தேசியக் கொடியேற்றல் பெயர்ப் பலகை திரைநீக்கம் சட்டக் கல்லூரி திறப்பு ஆகிய நிகழ்வுகள் நடைபெறவுள்ளன. இந்நிகழ்வில் விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகரும், தத்துவாசிரியருமான கலாநிதி அன்ரன் பாலசிங்கம், தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன், தமிழீழ காவற்துறைப் பொறுப்பாளர் பா. நடேசன் ஆகியோர் கலந்து கொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இச்சட்டக் கல்லூரியானது தற்காலிக கட்டிடத்தில் புதுக்குடியிருப்பில் இயங்கி வந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

# முன்னாள் அமைச்சர் எஸ்.பி. கைது செய்யப்பட்டு விடுதலை

(நமது நிருபர்)

லஞ்ச ஊழல் குற்றச்சாட்டின் பேரில் முன்னாள் அமைச்சர் எஸ்.பி.திசாநாயக்கா லஞ்ச ஊழல் ஆணைக் குழுவினரால் கைது செய்யப்பட்டு நீதிமன்ற உத்தரவின் பேரில் நேற்று பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

அமைச்சர் பதவி வகித்த காலத்தில் சட்ட விரோதமான முறையில் சொத்துக்களை சேர்த்ததாக இவர் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. இரண்டு கோடி 90 லட்சம் ரூபா பெறுமதியான சொத்துக்களுக்குரிய விபரங்களை இவர் சமர்ப்பிக்க தவறியதாகவும் கூறப்பட்டுள்ளது.

மேல் நீதிமன்றத்தில் இவருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்படவிருப்பதாக லஞ்ச ஊழல் ஆணைக்குழு பொலிசார் நீதிமன்றத்தில் நேற்று அறிக்கை சமர்ப்பித்தனர்.

இதனை ஏற்றுக் கொண்ட நீதிபதி ரூபா 25 லட்சம் ரொக்கம் மற்றும் ஒரு கோடி ரூபா சரீரப் பிணையில் சந்தேக நபரை செல்ல அனுமதித்து, மீண்டும் ஜனவரி 27ஆம் திகதி ஆஜராக வேண்டும் என்றும் உத்தரவிட்டார்.

# தர்மேந்திராவின் விடுதலைக்கு குவைத் ஊடாக முயற்சி!

(நமது நிருபர்)

ஈராக்கிய தீவிரவாதிகளினால் பிடித்து வைக்கப்பட்டுள்ள இலங்கைத் தமிழரான தினேஷ் தர்மேந்திரா இராஜரத்தினத்தின் விடுதலைக்காக குவைத் இஸ்லாமிய தலைவர்கள் ஊடாக அழுத்தம் கொடுக்கப்படவிருப்பதாக இலங்கை வெளிவிவகார பிரதியமைச்சர் பேராசிரியர் விஸ்வ வர்ணபால தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் தெரிவிக்கையில், புனித ரம்ழான் பண்டிகை காலம் என்பதால் இவ்விவகாரத்தில் சாதகமான முடிவை பெற்றுக் கொள்ள முடியும் என்றும் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

தொழில் புரிந்த நிறுவன நிர்வாகியான யசீர் முஸ்தபா புதாஹி அவரது விடுதலை தொடர்பாக ஆர்வம் செலுத்தி வருகின்றார். குவைத்திலுள்ள ஆன்மீக தலைவரான அல் ஷேக் ஹரேக் அல்தாரி ஊடாக அவரது விடுதலைக்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

### காத்தான்குடியில்...

ட்ட மேலதிக நீதிபதி எம்.எச். எம்.அஜ்மீர் இந்த அனுமதியை வழங்கினார். கடந்த சனிக்கிழமை ரவூப் மௌலவியின் சகோதரியின் வீட்டின் மீது கைக்குண்டு வீசப்பட்ட சம்பவம் தொடர்பான அடையாள அணிவகுப்பு இன்று உத்தியோகப்பற்றற்ற நீதிபதி எம்.நூர்டீன் முன்னிலையில் நடைபெற்றது.

சாட்சிகள் சந்தேக நபரான மொக மது ஹுசேன் என்பவரை அடையாளம் காட்டத் தவறியதையடுத்து மட்டக்களப்பு மாவட்ட நீதிமன்றம் இவரை விடுதலை செய்துள்ளது. இது ஒருபுறமிருக்க குறிப்பிட்ட வன்முறைச் சம்பவங்கள் காரணமாக காத்தான்குடி பிரதேசத்தில் இரண்டு பள்ளிவாயல்களில் தஞ்சம் பெற்றிருந்த 500இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் தற்போது தமது வீடுகளுக்கு திரும்பியுள்ளனர்.

### அதிபரின்...

கடமையாற்றும் அதிபரை இடமாற்றம் செய்வதற்கு கல்வித் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கையினைக் கண்டித்து இம்மாணவர் போராட்டம் நடைபெற்றுள்ளது.

இதில் மாணவர்களது பெற்றார் மற்றும் பழைய மாணவர்களும் கலந்து கொண்டனர். இதனால் காளியம்மன் கோயில் வீதிப் போக்குவரத்து சுமார் ஒரு மணிநேரம் தடைப்பட்டிருந்தது. தமது கோரிக்கைக்கு சாதகமான பதில் கிடைக்கும்வரை பாடசாலைப் பகிஷ்கரிப்பைத் தொடரப் போவதாகவும் அறிவிக்கப்படுகிறது.

ஏறாவூர் கோட்டக் கல்வி அதிகாரி ஐ.எல்.சற். ஆப்தீன் இது தொடர்பாக மாண[illegible]ர்களின் பெற்றோருடன் நடாத்திய பேச்சுவார்த்தை பலனளிக்கவில்லை யுத்த அனர்த்த ங்களினால் பாதிக்கப்பட்ட இப்பாடசாலையில் கடந்த பதினான்கு வருடங்களாக எவ்வித அபிவிருத்தி நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படாதுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

### இன்று நோர்வே...

இதேவேளை பீற்றர்சனுடன் வரும் நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர் விடார் ஹெல்கீசன், மற்றும் சிறப்புத் தூதுவர் எரிக்சொல்ஹெய்ம் ஆகியோர் சனிக்கிழமை நோர்வே திரும்புகின்றனர்.

### தாயகம்...

பொறுப்பாளர் பா.நடேசன், கடற்புலிகளின் சிறப்புத்தளபதி கேணல் சூசை, தளபதி கேணல் ஜெயம், கேணல் ரமேஸ், கேணல் விதுசா, தமிழீழ மகளிர் அரசியல்த்துறைப் பொறுப்பாளர் தமிழினி, நீதி நிர்வாகத்துறைப் பொறுப்பாளர் பரா போன்ற தளபதிகள், பொறு ப்பாளர்கள், போராளிகள் உள்ளிட்ட முக்கியஸ்தர்கள் சென்று வரவேற்றனர்.

நேற்று பிற்பகல் அன்ரன் பாலசிங்கம் அவர்கள் தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்களைச் சந்தித்துக் கலந்துரையாடலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

### கறுவாக்கேணியில்...

காயமடைந்தவர் அக் கிராமத்தைச் சேர்ந்த கோபாலன் புவிதரன், வயது 26 என தெரிவிக்கப்படுகின்றது.

தனது வீட்டிலிருந்து சைக்கிளில் சென்று கொண்டிருந்த இவரை விக்னேஸ்வரா வித்தியாலயத்திற்கு அருகாமையில் எதிர்கொண்ட இரண்டு நபர்கள் இவர்மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்துள்ளனர்.

துப்பாக்கிப் பிரயோகம் செய்த இரண்டு நபர்களும் மோட்டார் சைக்கிளில் தப்பிச் சென்று விட்டார்கள்.

### பேச்சுவார்த்தையில்...

சென்று சந்தித்த போது மேற்கண்டதகவலை தெளிவுபடுத்தினார்.

3 நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆளும் கட்சிக்கு மாறினாலும் தமது இக்கோரிக்கைக்கு பாதிப்பு இல்லை என்பதை சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் எடுத்துக் கூறியுள்ளது.

கடந்த கால யுத்தத்தினால் முஸ்லிங்களுக்கு ஏற்பட்டுள்ள இழப்புகளின் ஆவண அறிக்கையொன்றும் நோர்வே பிரதிநிதிகளிடம் கையளிக்கப்பட்டது.

நோர்வே பிரதிநிதிகள் இலங்கை அரசாங்கத்தின் சமாதானச் செயலகப் பணிப்பாளர் நாயகம் ஜயந்த தனபாலவையும் சந்தித்து உரையாடியுள்ளனர்.

### சமாதானப்...

கொழும்பு வந்திக்கும் நோர்வேயின் சிறப்புத் தூதுவர் எரிக் சொல்ஹெய்மை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உபதலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ஜோசப் பரராஜசிங்கம் தலைமையிலான குழுவினர் சந்தித்த போதே மேற்கண்டவாறு வலியுறுத்தியுள்ளனர்.

நோர்வே தூதரகத்தில் நேற்றுப்பகல் நடைபெற்ற சந்திப்புத் தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் கருத்துத் தெரிவிக்கையில்:-

இடை நிறுத்தப்பட்ட சமாதானப் பேச்சுவார்த்தையை உடனடியாக ஆரம்பிக்கப்பட வேண்டும் அத்துடன் இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை அமைக்கப்பட வேண்டும் என்பதை நோர்வேத் தரப்பினரிடம் வலியுறுத்தியுள்ளோம்.

ஜனாதிபதி தற்போது சமாதானப் பேச்சுவார்த்தையை முன்னெடுக்காது தன்னுடைய அரசியல் லாபம் தேடும் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகிறார். இதனால் தமிழ் மக்கள் நம்பிக்கை இழந்துள்ளனர்.

எனவே நோர்வேயும் சர்வதேச சமூகமும் மீண்டும் பேச்சுக்களை ஆரம்பிக்குமாறு வலியுறுத்த வேண்டும். கடந்த ஐம்பது ஆண்டு காலமாக தமிழ் மக்களின் பிரச்சினையை சிங்கள தலைவர்கள் எவ்வாறு இழுத்தடித்தார்களோ அதே பாணியைத் தான் தற்போது ஜனாதிபதி கடைப்பிடித்து வருகிறார்.

ஆனால் விடுதலைப்புலிகள் சமாதானப் பேச்சுக்கள் மீண்டும் ஆரம்பிக்கப்பட வேண்டும் என்பதில் உறுதியாகவிருக்கின்றனர் என்பதை நோர்வே தரப்பினரிடம் சுட்டிக்காட்டிய ஜோசப் பரராசசிங்கம், போரினால் சிதைவ டைந்த தமிழர் தாயகத்தை புனரமைப்பு செய்ய வேண்டும். அண்மையில் ஜனாதிபதி அமைத்துள்ள சபை காரணமாக அரச சார்பற்ற நிறுவனங்கள் கூட எதையும் வடக்குக் கிழக்கில் செய்ய முடியாதுள்ளது என்பதையும் தெளிவுபடுத்தியுள்ளதாகக் குறிப்பிட்டார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பில் நாடாளுமன்ற உறுப்பினர்களான சுரேஸ் பிரேமச்சந்திரன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம், கஜேந்திரன், பத்மினி சிதம்பரநாதன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

எரிக்சொல்ஹெய்முடன் இலங்கைக்கான நோர்வே தூதுவர் ஹான்ஸ் பிறட்ஸ்கர், நோர்வே வெளிவிவகார அமைச்சின் உயர் அதிகாரி சொல்பிறிற்லியன் ஆகியோரும் உடன் இருந்தனர்.

## ஆண்டு ஒன்று நினைவினிலே

மலர்வு
21
01
1955



உதிர்வு
10
11
2003

**அமரர் இளையதம்பி சிவனேசராஜா**

தந்தையாய் நீயிருந்து தரணியிலே மாண்புடனே
சிந்தை மிகுந்தவராய் சீர்கல்வி தானூட்டி
முந்தி இருப்பதற்கு சபையினிலே ஆக்கி விட்ட
எந்தையே! உன் ஆத்மா சாந்திபெற வேண்டுகிறோம்

ஆண்டு ஒன்றோடி அகன்று விட்டதையா நீங்கள்
மீண்டு வரமாட்டீர்களா? மேதினியில் பிறப்பெடுத்து
தெய்வத்தின் பாதத்தில் சிரஞ்சீவியாய் நீ இருந்து
உய்வடைய தான்தோன்றி அப்பனைநாம் வேண்டுகிறோம்
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

தங்கள் பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்
அம்பிளாந்துறை
கொக்கட்டிச்சோலை

தகவல்:- திரு இ.சிவலிங்கம்
(ஆசிரியர்)

இப்பத்திரிகை நித்தி பதிப்பகத்தில் 10. 11. 2004 அன்று அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.